தமிழ்த் தென்றல் 12

17-10-1952


N52.6-12
209355

தீபாவளி

திருக்கார்த்திகை

பட்டாசுகள் மத்தாப்புகள்

100-க்கு மேற்பட்ட நூதன

ரகங்கள்.

தமிழகத்தின் தலைசிறந்த

தொழிற் நிலையம்

# "ஸ்டாண்டர்டு"

பட்டாசு வகைகளில் பலவிதம்

மத்தாப்பு ரகங்கள் அநேகம்

கம்பி மத்தாப்பு---கதிர் மத்தாப்பு

இப்படி

எத்தனை எத்தனையோ அழகு உதிர்க்கும் அம்சங்கள்.

**THE STANDARD FIRE WORKS INDUSTRIES,**

SIVAKASI. (S. INDIA)

கிடைக்குமிடங்கள்:

ஸ்டான்டர்டு பயர் ஒர்க்ஸ், டிப்போ,

38, அன்ட் 14-B. ஆண்டர்சன் தெரு, ஜி.டி. சென்னை.

P. ஹைசேன்சா அன்டு சன்ஸ்,

பாலக்கரை ரோடு : : திருச்சிராப்பள்ளி.




விளம்பர மன்றம்:

**PERFUME PARADISE**

தயாரிப்பாளர்கள்:


**S. V. முருகேசன் & பிரதர்ஸ்,**

மதுரை, பெங்களூர் சிடி & சென்னை.

ரிஜிஸ்டர் No 3010.

மந்தித்தோப்புமணிகட்டிச்சுவாமிகள்

கைமுறை அனுபோக



# சர்வரோக சஞ்சீவித்தைலம்

ஸ்நானம் செய்து சுகமடையுங்கள்

தயாரிப்பவர்கள்.

* எல்லா ஊர்களிலும் எமது ஏஜண்டுகளை தெரிந்து வாங்குங்கள்.

S.P. வடிவேலநாடார் அன் ஸன்ஸ்.

மந்தித்தோப்புமணிகட்டிச்சுவாமிகள்சித்தவைத்தியசாலை உசிலம்பட்டி.

மத்திய காரியாலயம்:- 25, சம்பந்த மூர்த்தி தெரு, மேலமாசி வீதி, மதுரை.







சென்னை-600 003




மதுரையிலே மக்களின் நன்மதிப்புக்கும் பாத்திரமாகி

அனுதினமும் அமோக ஆதரவுபெற்று வருகிறது

# சிட்டி ஆக்ஷன் ஹால்

18, மேலாவணி மூல வீதி, மதுரை.

உறுதியான இரும்புப் பெட்டிகள், விதவிதமான தேக்கு, தோதகத்தி, கண்ணாடி, சாதா பீரோக்கள், இன்னும் இதர பான்ஸி சாமான்கள் சரசமான விலையில் வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான இடம்.

உரிமையாளர் :

***எம். எஸ். வீரப்ப பிள்ளை.***

'ராஜன்'

# S. பாலு ரேடியோ சர்வீஸ்

3, தானப்ப முதலி தெரு,

**மதுரை.**

எல்லாவித ரேடியோ, ஆம்ப்ளிபையர்ஸ் ரிப்பேர்களும், குறித்த காலத்தில், சிறந்த முறையில், குறைந்த சார்ஜில் செய்து தரக்கூடும். புதிய பலவித ரேடியோ செட்டுகளும் எம்மிடம் கிடைக்கும்.

S. பாலு,

ரேடியோ என்ஜினியர்.

"ராஜன்"

# ஆல் இந்தியா நேஷனல் பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

தலைமை ஆபிஸ்: விருதுநகர்.

போர்டு-ஆப் டைரக்டர்ஸ் :

Thiru: V. V. இராமசாமி M. L. A.
,, M. S. பெரியசாமி நாடார்
,, K. M. A. C. வெயிலுமுத்துசாமி நாடார்
,, S. A. முத்து நாடார்
,, P. SV. P. ஏறுதிநாதன்
,, K. S. சண்முகவேல் நாடார்
,, R. பொன்னையா ஆச்சாரி
,, V. A. P. சிவசாமி
,, P. P. சபாபதி நாடார்

ரூ. 250. ரூ. 400. ரூ. 500. ரூ. 750. ரூ. 1000-க்கு

நவீன இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள். தினம் ஓர் அணு சேமிக்க சாத்தியமுடையவர்களும் இன்ஷ்யூர் செய்துகொள்ளலாம். ஏஜண்டுகள், ஆர்கனைசர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்.

**P. SV. P.**
ஏறுதிநாதன்,
ஏஜன்ஸி டைரக்டர்.

**V. V.**
இராமசாமி M. L. A.
மானேஜிங் டைரக்டர்.






# தமிழ்த் தென்றல்

ஆசிரியர்: V. V. இராமசாமி M. L. A.


"வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று."


கொடி 6 | திருவள்ளுவராண்டு—1983 ஐப்பசித் திங்கள் 1உ (17—10—'52) | பூ 12


உள்ளுறை.




| | | பக்கம் |
|---|---|---|
| வந்தார் பார்த்தார் போனார் .... .... .... | தலையங்கம் | 7 |
| மைத்துனி .... | (தொடர் நாவல்) ஜீவா | 15 |
| சிந்தனை சிறகினிலே .... .... | டி. என். கிருபேந்திரபாபு பி. எஸ்ஸி. (ஹானர்ஸ்) | 17 |
| வாழ்வின் வெற்றிக்கு வழியும் வகையும் .... | டர்பன் ச. மு. பிள்ளை | 21 |
| சரியான பதில் .... | செல்வராஜு | 26 |
| அழிந்த ஆசை! .... | மக்களன்பன் | 29 |
| மொழியாராய்ச்சி .... | வித்துவான் ந. சேதுரகுநாதன் | 38 |
| மண்மேட்டுக் காதல் | வீ. தேரியப்பன் | 45 |
| ஐயோ அழகே! ... | ப. சி. அ. வணங்காமுடி | 54 |
| ஒரே நடிப்பு! ... | விருதை ந. இராமசாமி | 60 |


*கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே! கவிதை கட்டுரையாளரின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். தமிழ்த்தென்றலில் வெளிவரும் கட்டுரை, கதை முதலியன ஆசிரியர்க்கே உரியவை. ஆசிரியர் அனுமதியின்றி எவரும் அதைத் திரும்பவெளியிடும் உரிமையுடையவராகார். ஆசிரியர்.*

## ருசிகரமான பிரியாணி!

* நாவிற்கு ருசிகரமான பிரியாணி.
* முகமலர்ந்த உபசரிப்பு.
* வசதியான இடவசதி.
* நகரத்திற்கு மத்தியிலுள்ளது.

அத்தனையும் ஒருங்கே அமைந்த

# பாண்டியன் லாட்ஜ்

**சிறந்த மில்டேரி பிரியாணி**

**சாப்பாடு ஹோட்டல்**

8, வெங்கலக்கடைத் தெரு,

மதுரை.

குறிப்பு:— எங்கள் விசேஷதயாரிப்பு ருசிமிகுந்த ஸ்பெஷல் மட்டன்கள். விசேஷகால ஆர்டர்களுக்கு அளவில்லாத சாப்பாடு குறித்த நேரத்தில் சப்ளை செய்யப்படும்.

—ராஜம்


—தமிழ்த்தென்றல்

# வந்தார்! பார்த்தார்! போனார்!

சென்னை மாநிலத்தில் உணவுக் கட்டுப் பாடுகளை நீக்கிய பின்பு எதிர்பார்த்த மழை பெய்யவில்லை. பயிரிடும் பட்டம் தவறி விட்டது. ஆகவே நன்செய்களிலும் புன்செய்களிலும் வேலை கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்த உழவுத் தொழிலாளிகள் பெரிய ஏமாற்றத்திற்கு உள்ளானார்கள்.

ஏதாவது பயிர் செய்து தானும் உண்டு எஞ்சியதைக் கொண்டு ஏதேனும் ஒரு வருமானத்தைத் தேடிக் கொள்ளலாமென்று எண்ணியிருந்த நிலக்கிழார்களுக்கும் வேதனையாக முடிந்தது.

வெள்ளாண்மை செய்வதற்குத் தான் தண்ணீர் இல்லை என்றால் குடிப்பதற்கும் தண்ணீர்ப் பஞ்சம் நாடெங்கும் ஏற்பட்டு விட்டது. இந்நிலையில், பஞ்சத்தாற் பிடிக்கப்படாத மாவட்டம் ஏதொன்றுமில்லை என்று சொல்லக்கூடிய கட்டத்திற்கு வந்து விட்டது நமது மாநிலம்.

எதிர்பாராத இந்தத் தொல்லை நமது முதலமைச்சர் இராஜாஜியைத் திணற அடித்து விட்டது. தனது அரசாங்கத்தால் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து விட்டதாகவும் இனி தில்லி அரசாங்கத்திலிருந்து உதவி கிடைத்தால் தான் சமாளிக்க முடியும் என்றும் அரற்றி விட்டார்.

சென்னையின் கூக்குரல் தில்லிக்கும் எட்டியது போலும். ஐதராபாத் மாநிலத்திற்கு வரத் திட்டமிட்டிருந்த நேரு சென்னைக்கும் வருவார் என்று அறிவிக்கப்பட்டது. குறிப்பாகக் கொடும் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் இராயலசீமா என்னும் ஆந்திர நாட்டைச் சுற்றிப் பார்வையிடுவார் என்றும் சொல்லப்பட்டது.

— தமிழ்த்தென்றல்

இந்தியப் பேரவையிலுள்ள எத்தனையோ மந்திரிகள் அண்மையில் சென்னைக்கு வந்து போயிருக்கின்றார்கள். அவர்கள் எல்லோருக்கும் இங்குள்ள பஞ்ச நிலை நன்கு தெரியத்தான் செய்யும். சென்னை அரசாங்கமும் திருப்பித் திருப்பித் தெரிவித்துத் தானிருக்க வேண்டும். மேலும் பொறுப்புள்ள இராஜாஜியே வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார். இவைகள் மூலமாக நிலைமையை அறியக் கூடிய வசதியிருந்தும் நிவாரணத்திற்கு உடனடியாக ஏற்பாடு ஏனோ செய்யவில்லை? மாறாக தான் வந்து நேரிற் பார்க்க வேண்டுமென்ற நோக்கம் நேருவுக்கு ஏன் உண்டாயிற்று என்பது புலனாகவில்லை. பஞ்ச நிலைமை முதன்மையான காரணமாக இருந்த போதிலும், வேறு காரணங்களும் இருக்கத்தான் வேண்டும். அவை என்ன என்பது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்தியப் பேரவையிலே முதலமைச்சர் பதவியையும் இந்திய நாட்டின் ஆளும் ஆதிக்கக்கட்சியாகிய காங்கிரசின் தலைவர் பதவியையும் ஒருங்கே வகிக்கும் வீரர் நேரு சென்னைக்கு **வந்தார்; பார்த்தார்; பேசினார்; போய்விட்டார். பயன் என்ன?**

பஞ்சத்தால் அவதிக்குள் ஆளாகி யிருக்கும் மக்களைப் பார்த்து எதற்கும் அரசாங்கத்தை எதிர் பார்க்கக் கூடாதென்றும், ஆபத்து வந்த காலையில் சங்கடத்தைச் சமாளிப்பதே வீரம் என்றும் ஆறுதல் மொழி பேசி யிருக்கின்றார். "உணவுப் பஞ்சம் ஏற்படாதபடி தடுக்கச் சென்னை மாநிலத்தில் இன்னின்ன திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்; அவைகளை நிறைவேற்றி வைப்பதில் மக்களின் ஒத்துழைப்பும் முயற்சியும் இருக்க வேண்டும்" என்று ஏதாவது ஒரு வழி வகுத்துக் கொடுத்தாரில்லை. ஆகவே பஞ்சம் தீர்ப்பதற்கு எந்த அரசாங்கத்தாலும் முடியாது; ஆனால் இனியாவது மழை இரங்கிப்





பெய்தால் மக்கள் தாமே உழைத்துத் தீர்த்துக் கொள்ளலாம் என்பது தான் உண்மை.

பலவித நிவாரண வேலைகளிலே பல கோடி ரூபாய்கள் செலவாகி விட்டன. மேலிட்டும் மக்களால் புதியவரிகள் செலுத்த முடியாத நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. ஆதலால் நடு இடத்து அரசாங்கம் சென்னைக்குப் போதிய பொருள் உதவி செய்ய வேண்டுமென்பது கோரிக்கை. இதற்கு நேரு என்ன சமாதானம் கூறியிருக்கிறார்?

**"சென்னைக்குத் தனிச் சலுகை காட்டுவதற்கில்லை; இதே போன்றபிறமாகாணங்களுடைய நிலைமையையும் கவனிக்க வேண்டியதிருக்கின்றது"** என்று சொல்லி விட்டார்.

தங்கள் செலவினங்களுக் கெல்லாம் வேண்டிய பணத்திற்கு மக்களிடத்திலே தான் அரசாங்கம் போகின்றது. ஆனால் அதே மக்கள் உதவி கேட்கும்போது எதற்கும் அரசாங்கத்தை எதிர் பார்ப்பது சரியன்று என்று கூறும் உபதேசம் விந்தையாகத் தானிருக்கின்றது! தில்லி அரசாங்கத்திற்கு நம் மாநிலத்திலிருந்து கோடிக்கணக்கான பணம் பல வரிகளாகக் கொள்ளை போகின்றன. **ஆனால் திருப்பி நமக்குக் கிடைப்பதோ மிகக் கேவலம்.** இதைச் சுட்டிக் காட்டினால் இந்தியாவை ஒரே நாடாகப் பாவிக்க வேண்டுமென்று எளிதாகச் சொல்லிவிடுகிறார்கள்.

நம் நாட்டின் பெரிய குடிசைக் கைத்தொழிலான கைத்தறி நெசவுத் தொழில் கொடிய ஆபத்தான நிலைமையில் இருப்பதால் வேஷ்டிசேலை நெய்வதைக் கைத்தறிக்கு ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்பது இராஜாஜியின் கோரிக்கை. ஆனால் நேரு அதற்கு இணங்கவில்லை. கைத்தறிக்கு எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவு செய்யலாமென்றும் ஆன போதிலும் பொருளாதாரச் சட்

டங்களுக்கு மீறி எதையும் பிடித்துக் காப்பாற்ற முடியாதென்றும் எச்சரித்திருக்கிறார். இயந்திர சாதனங்களுடன் கைத்தறி நெடு நாளைக்குப் போட்டியிட முடியாதென்றும் நாளடைவில் வேறு தொழிலில் ஈடுபட வேண்டியது வரும் என்றும் தான் முதலமைச்சர் பேச்சிலிருந்து ஊகிக்க வேண்டியதிருக்கின்றது.

ஆந்திரர்கள் தங்களுக்கெனத் தனி மாகாணம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழர்களும், ஆந்திரர்களும், மற்ற மொழியாளர்களும் கட்டுமுறையாகத் தாங்களே ஒரு முடிவுக்கு வரக் கூடுமானால் பின்னால் மனக்கசப்பு ஏற்படாமலிருக்கும். ஆகையால் அப்பேர்ப்பட்ட சூழ்நிலை ஏற்படாத நிலையில், தான் தலையிடப் போவதில்லை என்று நேரு சொல்லியிருக்கின்றார். காங்கிரசுச் சபையானது பல ஆண்டுகளாக மொழிவாரி மாகாண அமைப்புக்களை ஆதரித்திருக்கின்றது.

மொழிவாரிப்படியே அச்சபையின் வேலையும் இயங்கி வருகின்றது. அப்படியிருந்தும் தனக்கு மொழிவாரிப் பிரிவினையில் நம்பிக்கையில்லை என்று நேரு சொல்வது ஒப்புக்கொள்ளக் கூடியதாக இல்லை.

எனினும் ஆந்திரர்களும் தமிழர்களும் பிரிந்துபோக உறுதி கொண்டு விட்டார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். எல்லாத் தொல்லையும் சென்னை நகரத்தைப் பொறுத்துத் தான்.

ஆகவே இங்கு வந்த வேளையில், சென்னை நகரம் தமிழருடையதுதான்; என்றும் புதிய ஆந்திர நாட்டுக்குத் தனியாக ஒருதலைநகரை உண்டாக்கிக் கொள்ள வேண்டியது தானென்றும் அதற்கு ஏற்படும் செலவினங்களைப் பெரும்பாலும் டில்லி அரசாங்கம் கொடுத்து விடலாம் என்றும், கூறியிருந்தால் பிரச்சினை எளிதில் முடிந்திருக்குமென்று நம்புகிறோம்.

தமிழ்த் தென்றல்—



ஆகவே நேரு வந்து பார்த்ததன் பயனாக நாம் கண்டதென்ன?

பஞ்சந் தீர உதவி எப்பொழுது எவ்விதமாக வருமென்று தெரியவில்லை.

நிதி உதவியும் எவ்வளவு கிடைக்குமென்பதும் புரிந்து முடியவில்லை.

கைத்தறி நெசவுத் தொழில் விமோசனத்திற்குப் பதிலாக இனி அழிவுகாலந்தானோ என்றும் எண்ண வேண்டியதிருக்கிறது.

ஆந்திர தமிழ் மாகாணப் பிரிவினை எளிதில் அமைதியாக முடியாதென்றும் தோன்றுகின்றது.

டில்லியை எதிர்பார்த்து நிற்பதில் பயனில்லை என்ற முடிவுக்குத்தான் விரட்டப்பட்டிருக்கின்றோம்.

“பஞ்ச நிலைமையைப் பார்வையிடும் காரணத்தை முதன்மையாகக் கொண்டபோதிலும், நேரு வந்ததற்கு வேறு காரணம் இரண்டு உண்டு என்று அவர் பேச்சிலிருந்து தெரிகின்றது.

முதலமைச்சர் நேரு சென்னையிற் பல இடங்களிற் பேசியிருக்கின்றார். அவர் வருகையை நல்ல முறையில் உபயோகிக்க ஆதிக்கத்திலுள்ளவர்கள் தவறி விட்டார்கள் என்று குற்றஞ்சாட்டுகிறோம்.

இந்தி மொழியைக் கட்டாயமாக்குவதால் என்ன ஆபத்துகள் ஏற்படுமென்று தமிழர்கள் அஞ்சுகிறார்கள்? என்பதையும் வடநாடு தென்னாடு என்ற வெறுப்பு மனப்பான்மை ஏன் ஏற்பட்டிருக்கின்றதென்பதையும் ஆராய்ந்து

தமிழ்த்தென்றல்—

உணர முயற்சித்திருக்க வேண்டும். அதை விடுத்து இந்தி எதிர்ப்பியக்கத்தைப்பற்றியும் திராவிட நாட்டுப் பிரிவினை இயக்கத்தைப் பற்றியும், காங்கிரசுக்காரர் சொல்லிக் கொடுக்கும்காரணங்களைவைத்து வீணாக அவதூறாகப்பேசியிருக்கிறார்.

**இதன் விளைவு என்ன?** 'சமரசத்திற்கு வழியில்லாமல் வெறுப்பு அதிகரிக்கத்தான் வகை செய்து விட்டார்கள், நேருவின் சொற்களைக் கேட்டு மகிழ்ச்சியடைகின்றவர்கள்.

ஆங்கிலேய நாட்டிலிருந்து இந்தியா விலகவேண்டுமென்று கிளர்ச்சி செய்த காலங்களில் ஆங்கிலேயர்கள் எப்படி எள்ளி நகையாடினார்களோ, என்ன சொற்களை உபயோகித்தார்களோ, பாக்கிஸ்த்தான் பிரிவினையை ஜின்னா கிளர்ச்சி செய்தபோது காங்கிரசுக்காரர் எப்படி அலட்சியப் படுத்தினார்களோ, எவ்விதத்திற் சிறுமைப் படுத்தினார்களோ அதேபோன்றுதான் காங்கிரசுத் தலைவரின் போக்கும் இருக்கின்றது. **காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.**

இரண்டாவதாக, சென்னையில்தான் விசித்திரமான அமைச்சர் அவை ஏற்பட்டிருக்கின்றது. அஃதாவது உலகத்திலுள்ள புதுமை. நியமனத்தால் அங்கம் பெற்ற ஒருவர் முதலமைச்சர் பதவி ஏற்று அரசாங்கத்தை நடத்தி வருவது. **இந்த அமைப்புக்கு நேரு ஒப்பம் தரவில்லை** என்று தாராளமாகச் சொல்லப்பட்டது. எனினும் சி. ஆர். அவர்கள் தில்லியின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது பதவி ஏற்று அநேக காரியங்களைச் சாதித்திருக்கின்றார்.

மாநிலத்து மக்களிடத்திலே ஒருவாறு திருப்தி ஏற்பட்டிருந்தபோதிலும், காங்கிரசுக்காரர்கள் மீது மக்களுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்புக் குறைந்து வருகிறதா?

— தமிழ்த்தென்றல்



கம்யூனிஸ்டுக்காரர்களின் செல்வாக்கு எந்நிலையிலிருக்கிறது என்பதும் நேரில் தெரிந்து கொள்வதற்கு நேரு ஆவல் கொண்டிருக்கவேண்டும்.

மேலும் மந்திரி சபையைக் காங்கிரசுக்கட்சி கைப்பற்றிய போதிலும், அது நீடித்து நிலைத்து நின்று மக்களுக்கு நிரந்தரமான நன்மை செய்ய வேண்டுமானால் சென்னையைப் பொறுத்தமட்டில் மக்கள் நாயகமுறையில் கூட்டு மந்திரிசபை அல்லது தேசிய மந்திரிசபை என்ற முறையில் அமைய வேண்டுமென்பது இராஜாஜியின் விருப்பமும் நோக்கமும் என்பது வெளிப்படையாகச் சொல்லப்படாத இரகசியம். ஆனால் இந்த நோக்கத்திற்கு நேரு இடங்கொடுக்கவில்லை என்பது தெரிந்ததுதான்.

ஆகவே இப்பொழுது இருக்கும் சூழ்நிலை எப்பேர்ப்பட்டது. சென்னை அரசாங்கத்திற்கு இப்பொழுது இருக்கும் ஆதரவு சரிதானா? அல்லது வேறு வழிகாண வேண்டுமா? என்பதையும் நேரு ஆராய்ச்சி செய்து பார்க்க முற்பட்டிருக்கலாம்.

சென்ற தேர்தலில் காங்கிரசுக்காரர் சட்டசபையில் சிறுபான்மையினரானதற்குக் காரணங்களை விளக்கிக் கண்டித்துப்பேசி எச்சரித்திருக்கின்றார். "அரசாங்கம் வகுக்கும் திட்டம் தப்பாக இருக்கலாம்; ஆனால் கெட்டவர்கள் என்ற பெயர் மட்டும் வாங்கிவிடக்கூடாது; அதுதான் ஆபத்து" என்று கண்டித்திருக்கின்றார்.

சென்ற ஆட்சியில் நடந்தது ஒன்று சொல்ல விரும்புகிறோம். கிரமமாக அங்கீகரிக்கப்பட்ட திட்டவரிசையில் இடம் பெறாத ஒரு திட்டத்திற்கு முதலிடங் கொடுத்ததுமல்லாமல் சட்ட சபை அநுமதியில்லாமல் இருபத்துமூவாயிர ரூபாய் செலவழிக்கப் பட்டிருப்பதாகத் தெரிய வருகி

— தமிழ்த்தென்றல்

றது. இந்த விதமான அலங்கோலங்கள் எத்தனையோ? ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கப் பணித்துறையா வற்றிலும் நடைபெற்ற அக்கிரமங்கள், தலையீடுகள், எதேச்சாதிகாரங்கள் போன்ற கொடுமைகளை ஒவ்வொரு ஊரிற் போய்க்கேட்டால் பயங்கரமாக இருக்கின்றது. இவைகளை எல்லாம் மனத்தில் வைத்துத் தான் பதவிக்காகவும் இலாபத்துக்காகவும் உழைப்புக்காகவும் காங்கிரசுக்காரர் தங்கள் உழைப்பைப் பயன் படுத்தக்கூடாதென்று அவர்கள் கூட்டத்தில் தலைவர் நேரு அறிவுறுத்தி யிருக்கின்றார். தென்னாட்டு காங்கிரசுக்காரர்கள் மண்டையில் இச்சொற்கள் ஏறுமோ?

நேரு வந்து பார்த்து மந்திரிகளுடனும் காங்கிரசுத் தலைவர்களுடனும் மற்றும் பொது நலச் சேவையிலீடுபட்ட அநேகத் தலைவர்களுடனும் கலந்து பல பேச்சுக்கள் பேசி விட்டுத் திரும்பிப் போயிருக்கின்றார்.

நம் மாநிலத்தின் பிற்கால வாழ்க்கைக்கு அநுகூலமாக ஏதாவது மாறுதலேற்படுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

"வான் நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று".

தமிழ் வெல்க!

— தமிழ்த்தென்றல்

தொடர் நாவல்

# மைத்துனி

## ஜீவா

சதானந்தம் பிள்ளை, "அது பற்றித்தான் நீங்கள் வருகையில் பேசிக்கொண்டிருந்தோம்" என்று புன்முறுவலை வருவித்தவாறு சொன்னார்.

"என்ன?" என்று மாசிலாமணி முதலியார் ஒன்றுந்தெரியாதவர் போல் கேட்கலானார்.

ஏற்கனவே அவமானத்தால் குன்றிப்போயிருந்த சிவகுமாரன், முதலியாருடைய கேள்விக்கு அப்பா என்னவிதமாகப் பதில் சொல்வாரோ என்ற அச்சத்தோடு குனிந்த தலையை நிமிராமலே கடைக்கண்ணால் நோக்கினான்.

தம்முடைய மகன் பரீட்சையில் பெயிலாகிவிட்டான் என்பதை சதானந்தம் பிள்ளை தம் வாயாலாயே சொல்லச் சிறிது சங்கடப்பட்டார். ஆனாலும், கேட்டதற்குப் பதில் சொல்லியாக வேண்டியநிலையில் இருந்ததை நினைத்து, "நிலைமையைப் பார்த்தாலே உங்களுக்குத் தெரியவில்லையா? 'ரிசல்ட்' என்ன விதமாயிருந்திருக்கும்என்று. நீங்கள் வரும்போது நான் உரத்த குரலில் கோபமாகப் பேசிக்கொண்டிருந்தேன் என்றால், அது எதற்காக இருக்கும் என்று தெரிந்துகொள்ள உங்களுக்கு அதிக நேரம் ஆகுமா? இவனுடைய பரீட்சை ரிஸல்ட் இன்று காலைப் பத்திரிகையில்தான் வெளியாகியிருக்கிறது............." என்று ஒரு தினுசாக மறுமொழி கூறினார்.

மாசிலாமணி முதலியார் நரைத்த புருவங்கள் நெற்றியில் ஏற, "அப்படியென்றால், சிவன் பாஸாகவில்லையா?" என்று வியப்போடு வினவி விட்டு, சிவகுமாரன் பக்கந் திரும்பி, "ஏன் சிவா! அப்பா சொல்வது உண்மையா? அல்லது விளையாட்டுக்கு.........." என்று கேட்டு நிறுத்தினார்.

சிவகுமாரன் விவரிக்கவொண்ணாத வேதனையோடும் வெட்கத்தோடும் மேலும் தலையைக் குப்புறக் கவிழ்த்துக் கொண்டான்.

விடாக்கண்டரான முதலியார், வெந்த புண்ணில் வேலைச் செருகுவதுபோல் பேசினார்: "என்னால் கொஞ்சமும் நம்பவே முடியவில்லையே! சிவன் பாஸ் ஆகவில்லையென்றால், வேறெந்தப் பையனுமே இப்பரீட்சையில் பாஸ் ஆகியிருக்க முடியாது.........ஆமாம்........."

திலதவதியும் மங்கையர்க்கரசியும் உள்பக்கத்தில் இருந்தவாறே இவர்களுடைய உரையாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்தனர். 'இந்தச்

— தமிழ்த்தென்றல்

சமயத்தில் இந்த மனுஷன் வந்து தொலைந்தானே! ஏக்கச்சக்கமாக ஏதாயினும் சொல்லி அத்தானுடைய கோபத்தை அதிகப்படுத்தி விடுவாரோ என்னவோ!' என்று மங்கை அஞ்சலானாள்.

மங்கைக்கு மாசிலாமணி முதலியாரிடத்தில் நல்லபிப்பிராயம் கிடையாது. முதன் முதலாகப் பார்த்த போதே அவளுக்கு அவரைப்பிடிக்கவில்லை. எங்கு என்ன இருக்கிறது? என்ன நடக்கிறது என்று அறிவதிலேயே ஆவல் கொண்டவராய் நாலா பக்கமும் பார்வையைச் சுழல விட்டு பார்க்கும் கழுகுப்பார்வையும், எப்போது பார்த்தாலும் ஊர் அக்கப்போரையே அளந்து கொண்டிருக்கும் வம்புப் பேச்சும் அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. பிறரைப் பற்றி எப்போதும் குறைகூறிக் கொண்டிருக்கும் இவர் அத்தானைப் பற்றியும், அவர் குடும்பத்தைப்பற்றியும் பிறரிடம் அக்கப்போர் அளக்காமலிருப்பார் என்பது என்ன நிச்சயம்? அத்தகைய மனிதரிடம் உத்தமரான அத்தான் எப்படி நட்பு வைத்துக்கொண்டிருக்கிறார் என்று அவள் அடிக்கடி எண்ணி வியப்பதுண்டு. ஆனால், அக்காளுடன் அவர்பால் மரியாதை காட்டி நடப்பதைப் பார்த்து, தான் அவசரப்பட்டு யாரிடமும் அவரைப்பற்றி அபிப்பிராயம் வெளியிடக்கூடாது என்று அடக்கிக்கொண்டாள். ஆனால், இச்சமயத்தில் அவளுடைய மன உணர்ச்சியை அடக்கிக்கொள்ள முடியவில்லை. 'கட்டையிலே போகிறவன், இச்சமயத்தில்வந்துதொலைந்தானே!' என்றுதான் தன் மனதுக்குள்ளாகச் சபித்துக்கொண்டாள்.

பரீட்சையில் தவறிவிட்ட அண்ணனுக்கு அப்பா என்னவிதமான தண்டனை கொடுப்பாரோ? வைவாரோ? என்ற அச்சத்துடன் விசுவநாதன் தன் அறையிலிருந்து, இவ்விடத்தை எட்டி எட்டி பார்த்துக் கொண்டிருந்தான்.

சதானந்தம் பிள்ளை மாசிலாமணி முதலியாரை வியப்பாக நோக்கி "என்ன முதலியார்வாள், அப்படிச் சொல்லுகிறீர்கள்? சிவன் விஷயத்தில் உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை எப்படி யுண்டாயிற்று? நீங்கள் என்ன் கண்டீர்கள்?......" என்று கேட்டார்.


மாசிலாமணி முதலியார் பொக்கை விழுந்த வாயை அகலத் திறந்து கலகலவென நகைத்தவராய் "நான் எங்கு இருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், அண்ணா? எங்கெங்கு என்ன நடக்கிறது? யார் யார் என்ன செய்கிறார்கள்? என்று எனக்கு இருந்த இடத்திலிருந்தே எல்லாம் தெரியும்......" என்றார்.

சதானந்தம் பிள்ளை, "அது தான் எனக்கு நன்றாகத் தெரியுமே! நீங்கள் நாரதர்போல் சர்வலோக சஞ்சாரி; சகலமும் அறிந்தவர் என்று ........." என்று தமாஷாகக் கூறிக் குலுங்க குலுங்கச் சிரித்தார்.

"ஆனால் அண்ணா! நாரதமுனிக்குள்ளதாகச் சொல்லும் கலகந்

(66-ம் பக்கம் பார்க்கவும்.)

— தமிழ்த்தென்றல்



மூலம்: கவிஅரசர் தாகூர்.

தமிழாக்கம்:

டி. என். கிருபேந்திரபாபு பி.எஸ்ஸி. (ஹானர்ஸ்)

நிழல் தன் முகத்திரையைவிலக்கி விட்டு, ஒளியைப் பின் தொடர்கிறது; இரகசியமான விநயத்தோடு, அன்பு அடிகள் மெல்ல இட்டுக்கொண்டு.

விண் மீன்கள், மின்மினிப் பூச்சிகளைப் போன்று தோன்றத் தயங்குவதில்லை!

பெரும் ஆற்றல் அமைந்தவனாக நான் இல்லாததற்காக உம்மை வணங்குகின்றேன்; ஆனால் அந்தப் பெரும் ஆற்றலிலே அலைப்புண்டு அமைதியின்றி வாழும் பலரில் நானும் ஒருவன்!

விசாலமில்லாத, ஆனால் கூர்மையான மனம் சொல்வதை எளிதில் பற்றிக் கொள்கிறது, அதிலிருந்து விலகுவதில்லை.

— தமிழ்த்தென்றல்

மனிதன் தன்னையே வெளிப்படுத்திக் கொள்வதில்லை, தன் 'சுய சரிதத்' திலேயும்; அவன் அதிலிருந்து வெளி வரப் பெரிதும் முயற்சிக்கிறான்.

கடற்பறவைகளும், அலைகளும் சந்திக்க நெருங்குவது போல நாம் ஒருவரை ஒருவர் நெருங்குகிறோம்! அந்தோ பறவைகள் பறந்தோடி விடுகின்றன. அலைகள் சுருண்டு விடுகின்றன. நாமும் பிரிக்கப்பட்டு விடுகிறோம்.

என்னுடைய இன்றைய வேலைகள் முடிவடைந்தன; மணலின் மீது இழுத்து விடப்பட்ட படகைப் போல. நாட்டியமாடும் அலைகளின் இனிய சங்கீதத்தை, இந்த மாலையிலே, கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

உயிர் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; நாம் அதை கொடுத்துச் சம்பாதிக்கிறோம்!

தன்னடக்கம் நம்மிடம் குடி கொள்ளும் போது நாமும் பெரிய மனிதர்களின் வரிசையிலே இடம் பெறுவோம்.

வானம் பாடி, மயிலின் தோகைக் கனத்தைக் கண்டு மயிலுக்காக, வருத்தப்படுகிறது.

நண்பா! என் மதுவை என்னுடைய கிண்ணத்திலேயே எடுத்துக்கொள்!

பிற பாத்திரங்களில் விட்டால் அது தன்னுடைய நுரையை இழந்து விடும்!

சிறிய புல்லே! உன்னுடைய அடிகள் சிறியவையாய் இருக்கின்றன; ஆனால் மீயும் நிலத்தை உன் காலடியில் வைத்திருக்கிறாய்.

— தமிழ்த்தென்றல்



குழந்தைப் 'பூ' தன் 'முகை' யைத்திறந்து கத்திச் சொல்கிறது: "அன்பு உலகமே! வாடி விடாதே."

தவறெல்லாம் தோல்விக்கு அடிப்படை யாவதில்லை; ஆனால் சரியானதுங்கூட தோல்விக்கு அடி கோலுவதுண்டு.

முடிவில்லா மகிழ்ச்சியினால் மலர்களை வாரி யிறைக்கிறதே, அந்த ஊற்று எங்கே யிருக்கிறது.

மரம் வெட்டும் கோடலி, தன் பிடிப்பிற்காக மரத்தைப் பார்த்துக் கெஞ்சுகிறது. மரம் அதைக்கொடுத்தது.

கற்பு ஒரு செல்வம்; அதிகமான காதலினால் ஏற்படுகிறது.

மூடுபனி, காதலைப் போன்று, குன்றுகளின்மீது விளையாடி அழகில் அதிசயங்களை அளிக்கிறது.

நாம் உலகைச் சரிவர உணராமல், 'அது நம்மை ஏமாற்றி விடுகிறது' என்கிறோம்.

புல், தன் கூட்டத்தை நிலத்திலேயே தேடுகிறது; மரங்கள் தனிமையை ஆகாய வெளியிலே நாடுகிறது.


மனிதன் தனக்குத்தானே எல்லை வகுத்துக் கொள்கிறான்.

அன்பனே! உன் குரல் என் உள்ளத்திலே, பெரிய மரங்களினூடே கடலலைகளின் 'ஹோ' என்ற ஒலி பாய்ந்து அலைந்து திரிவதைப் போல அலைந்து திரிகிறது.

இருட்டிலே காண முடியாத ஒளி எங்கே யிருக்கிறது; அதன் சிதறல்கள் தானே விண் மீன்கள்? [தொடரும்].

— தமிழ்த்தென்றல்

ரெஜின
மூட்டைப் பூச்சி
பவுடர்




நித்திரைக்குப் பாதுகாப்பு கொடுக்கிறது. ரெஜின மூட்டைப்பூச்சிப் பவுடர் எங்கும் ஏராளமாக விற்பனையாகிறது.

தயாரிப்பவர்:
G. பழனியப்ப முதலியார், மதுரை.

எலெக்டிரிக் மிஷினில் தயார் செய்த பியூர் காபியும், சிக்கரி கலந்த காபியும் 1, 3, 5, 7, 20 பவுண்டு டின்களில் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.




எட்வர்ட் காபி ஒர்க்ஸ், காளியம்மன் கோவில் தெரு, விருதுநகர்.

# வாழ்வின் வெற்றிக்கு வழியும் வகையும்

டர்பன் ச. மு. பிள்ளை.

வாழ்க்கையின் வெற்றியைப் பற்றியும் அதை அடையும் வழிகளைப் பற்றியும் எடுத்துக் கூறும் பல நாட்டு நல்லறிஞர்களும், சான்றோர்களும் அது எப்படி மக்களுடைய மனநிலையோடு பிரிக்க முடியாத தொடர்பு கொண்டுள்ளது என்பதை வற்புறுத்தாமலில்லை. கண்கூடாக நாம் காண்பதும் இதுவே தான்.

நம் வாழ்க்கையில் நிகழும் செயல்களனைத்தும் மனதோடும், அதன் வழி மலரும் எண்ணங்களோடும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மனமே உலகில் நிகழும் பல செயல்களுக்கு காரணமாயிருக்கின்றது. ஆக்கல், அளித்தல், அழித்தல் முதலியவற்றின் மூலம் இறைவனே மனது என்றலும் பொருந்தும்.

பழமொன்று பழுப்பதற்கு மூலம் பூவே. அப்பூ பிஞ்சாகிக் காய்த்து, முற்றிப் பிறகு கனிவு பெறுகின்றது. அதே போன்று நம் வாழ்நாளில் நிகழும் ஒவ்வொரு செயலையும் வெவ்வேறு பழமென்று வைத்துக் கொண்டால், அதற்கு அடித்தலம் நம் மனதின்கண் தோன்றும் எண்ணமே மலராகும். பூ, பிஞ்சாகிக் காய்த்துப் பழமாவது போல, எண்ணமும் படிப்படியாக முதிர்ந்து இறுதியில் செயலாகி சித்தி பெறுகிறது.

எக்காரியத்தை நாம் செய்யினும், அதை முக்கரணத் தூய்மையோடு செய்வதே மேன்மை. மலரைப் போன்று, முதற்கண் மனத்தே மலரும் எண்ணம், மலரில் மறைந்து கிடந்த பிஞ்சு வெளிப்படுவதைப் போன்று அரங்கத்திற்கு வந்து அணி செய்கிறது. காற்று, கதிரொளி, காலநிலை முதலிய இவற்றால் முதிர்கின்ற பிஞ்சைப் போன்றே, வெளிப்படுத்தப்பட்ட எண்ணமாகிய பிஞ்சு, பிறர் அதை விரும்புதல், வெறுத்தல், சரி அல்லது தப்பு என்று தம் உள்ளக்கிடக்கையைத் தெரிவித்தல், முதலிய ஆராய்ச்சிகளால் முதிர்ச்சியடைந்து, இறுதியில் வாழ்க்கையில் செய்து காட்டலாகிய பழமாக கனிவு பெறுகிறது. பெருங்காற்றால் உதிர்ந்து போம் பிஞ்சை

— தமிழ்த்தென்றல்

ஒக்க நெறிமுறைக் கெதிரான எண்ணமாயிருப்பின், அதைச் செய்கையில் காண்பதில் பயனில்லை என்பது தேற்றம்.

தற்கால உளநூல்வாணர் செய்யும் ஆராய்ச்சியின் பயனாக, எப்படி எண்ணம் உண்டாகிறது என்றும், அது எங்ஙனம் செயலாக மாறுகின்றதென்றும், படித்து மகிழ இடமிருக்கின்றது. நினைப்பதற்கும் நடப்பதற்கும் வழிவகை கிடைக்கிறது. "மனதிற்கும் மூளைக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கின்றது. ஏனைய ஐம்பொறிகளும் மனதை வெளியுலகிலுள்ள பொருள்களை அறிந்து கொள்வதிற்கு உரிய வாயில்களாக இருக்கின்றன" என்று "ஓரர்ன்" என்னும் உளநூல் பண்டிதர் நவின்றுள்ளார்.

மணியடிக்கும் ஒலி கேட்டவுடன், கதவைத் திறக்கும்படி யாரோ ஒருவர் மணியை யடிக்கின்றார் என்ற எண்ணம் உண்டாக, உடனே கதவைத் திறக்க வேண்டுமென்ற மறு எண்ணம் தோன்றி, உறுப்புக்களுக்கு அறிவிக்கப்படவே, கைகள் அவ்வேலையைச் செய்கின்றன. இன்னது என்று அறியும் எண்ணமும், இன்னது செய்ய வேண்டுமென்று கூறுகின்ற நினைப்பும் இரண்டு வெவ்வேறு வித நரம்புகளின் மூலம் முறையே முதலில் மூளைக்கும் பிறகு அவயவங்களுக்கும் அறிவிக்கப்படுகின்றன என்பது உடல் நூல் படித்தவர்களுக்கு அறிந்த உண்மை.

இம்மனத்தின் மூலமாகவே வாழ்க்கையின் செயல்களனைத்தும் நடப்பதால், அது எவ்வளவு இன்றியமையாததென்பதையும், அந்த நாம் எப்படிக் காப்பாற்றி நல்வழிப்படுத்த வேண்டுமென்பதையும் நாம் நன்றாய்க் கவனித்து நோக்க வேண்டும். மனமெனும் நினைப்பாலேயே நாம் மேல் நிலையோ, அல்லது கீழ் நிலையோ அடைகின்றோம். "மனிதனது அக நிலைமைகளிலிருந்தே அவனது புற நிலைமைகளெல்லாம் உருவகம் பெறுகின்றதால், புற நிலைமைகளைத் திருத்துவதற்கு அக நிலைமைகளைத் திருத்த வேண்டும்" என்று "ஜேம்ஸ் ஆலன்" என்ற அறிஞர் மணி அறிவுரை தருகின்றார்.

மனம் போலவேயே மக்களுக்கு வாழ்வு மலரும். மக்களே, அதாவது மனமே நினைப்பின் தலைவனாகும். ஒழுக்கத்தைத் தோற்றுவிப்பதும், நிலைமையையும், சுற்றுச் சார்பையும், விதியையும் உண்டாக்கிக் கொடுப்பதும் அதுவே ஆகும். "மனிதனே தன் வாழ்க்கை வெற்றியை உண்டாக்கிக் கொள்ளும் சிற்பி" என்ற ஆங்கிலப் பழமொழியின் அறிவிப்பும் அவ்வாறே.

"நன்னிலைக் கட்டன்னை நிறுப்பா
னுந்தன்னை
நிலை கலக்கிக்கீழிடு வானு —
நிலையினு
மேன் மேலுயர்ந்து நிறுப்பானுந்
தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்"

என்று நாலடியாரும்.

— தமிழ்த்தென்றல்



"எண்ணிய வெண்ணியாங் கெய்துப
வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்று திருக்குறளும் முழங்குகின்றன.

மேற்கூறியாங்கு மனமே யாவற்றிற்கும் அடிப்படையென்று உண்மையைக் கண்டோமாதலின், நாம் மனதின் பயிற்சியைப் பற்றியும், வாழ்க்கை நிலையைப் பற்றியும் ஊக்கத்தோடிருப்பின், ஒழுக்கம் என்னும் குன்றேறி மேல் நிலையையடைந்து, பேரானந்த வீட்டின் வாயிற்படியில் கால் வைப்போம்.

நல்லெண்ணங்களே நற்பழக்கங்களாக மாறி நற்பயனை விளைவிக்கும். அங்ஙனமே தூய்மையற்ற கெட்ட எண்ணங்கள் அவற்றையுடையோரதுபுறவாழ்வை கெடுக்குமென்பதில் ஐயமுண்டோ?

ஆகவே மனிதன் வாழ்க்கையில் வெற்றி காண மனதில் தூய்மையுடையவனாக இருக்க வேண்டும். தன்னலத்தையே பாராட்டல், அழுக்காறு, அவா, வெகுளி, மயக்கம் முதலியன கெட்ட மனநிலைகளில் முக்கியமானவை. அவை அசுத்த உடையினை அணிதல், உடம்பினையும் அசுத்தமாய் வைத்துக்கொள்ளுதல், பிறர் பொருளை விழைதல், அடைய வேண்டத்தகாத காரியங்களைச் செய்தல், பெருண்டி, பெருந்துயில் முதலான பலகெட்ட செயல்களுக்கு இழுத்துக்கொண்டு சென்று வாழ்க்கையைக் கெடுக்கும். தன்னலமின்மை, அடக்கம், அன்பு, அருள், பொறுமை ஆகிய இவை முற்கூறியபடி ஒழுக்கமென்னும் குன்றிலேற்றி வெற்றி நிலைக்கு கொண்டு போய் விடுவன.

"ரஸ்கின்" "டால்ஸ்டாய்" போன்ற சான்றோரின் வாழ்நாள் குறிப்பு நமக்கு தரும் அனுபவமும் இதுவே யாகும்.

"நல்ல செய்து நரரை யுயர்த்தவு
மல்ல செய்தங் களற்றிடை
யாழ்ப்பவும்
வல்ல திந்த மன" — என்பதும்

"அறிவினுக்கு மரும் பொருளின்பொடு
வெறுவதற்கும் பெருங்கலிகற்றுயர்
விறலினுக்கு நல்வரந் தனக்கு மொண்
துறவினுக் குந் துணை மனம்" —

என்பதும் மனதின் மேன்மையை வலியுறுத்தி நிற்கின்றன.

மன நிலையைச் செம்மையுறச் செய்த பின்றான் வாழ்க்கையில் வெற்றிகாண இயலும். இதுவேதான் வாழ்வின் வெற்றிக்கு வழியும் வகையும்.

சிடி பிளாக் மேக்கர்ஸ்
போட்டோ, லைன்,
3 கலர் பிளாக்குகள் செய்யுமிடம்.
நெ. 11, அந்திக்கடைபொட்டல், மதுரை.

— தமிழ்த்தென்றல்

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி லிமிட்.

மதுரை-தூத்துக்குடி-அம்பாசமுத்திரம்

| 5,00,000 நூற்கும் கதிர்கள் | நெம்பர் 80 வரை நூல்கள் |
|---|---|

**நாங்கள் சப்ளை செய்வது**

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு
வேண்டிய காரிக்கன் நூல்கள்,
இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள்,
கன்த்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்
கேற்ற மடக்கு இரட்டை நூல்கள்
மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற
மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும்
நூல்களைப்போல் எல்லா வகையிலும்
கீர்த்தி பெற்றவை.

**நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.**

மானேஜர்கள்:


## ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

**மதுரை.**

போன்: 250 (4 லைன்). தந்தி: "ஹார்வி"

— தமிழ்த்தென்றல்






முகப்பரு, சொரி,
சிரங்கு, வேனல்கட்டி,
தீப்பட்ட புண்
முதலியவைகளுக்குச்
சிறந்தது.

# சைபால்

குழந்தைகளின்
ஆரோக்கியத்திற்குச்
சிறந்தது.






ரமணீஸ்

# பேபி கிரைப்

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை.

— தமிழ்த்தென்றல்

# சரியான பதில்!

செல்வராஜ்

“அன்பை அடக்கி ஒடுக்கவும் முடியாது
அழிந்து ஒழிக்கவும் ஆகாது — ஆணவம்
மிகுந்து ஆதிக்க வெறி குமுறக் குமுற
அன்பர்கள் தொகை பெருகியே தீரும்”

காலத்தை முன் வைத்துப் பேரறிஞர் “பிளாட்டோ” கூறிய உண்மை இது. வரலாற்றுக் கணக்கில் இந்த கருத்திற்கு என்றும் துண்டு விழுந்ததே கிடையாது. மீதத் தொகையே மிகுந்து நிற்கும்.

அராபிய வரலாற்றின் அன்பின் மணி மகுடம் “மான்டீர்.” கவிஞன். கற்பனையாளன். கருத்தாளன். கஷ்டப்பட்டான். என்றாலும் களங்கமற்றவன்.

அமைச்சர் “ஜாபர்” — இவன் — ஒரே அன்பு. ஒரே உயிர். ஒரே வாழ்வு. ஒரே உலகம். இவர்கள் இருவரும்.

மன்னன் “காலீப்.” அரசும் ஆதிக்கமும் அவன் கையில். பொன்னும் பொருளும் அவன் பக்கத்தில். ஏவலும் எடுபிடியும் எட்டும் தூரத்தில். இருந்தும் கூட மக்கள் அவனை மதிக்கவில்லை. “ஜாபரையே” புகழ்ந்தனர். போற்றினர். அவன் மக்களுள் மகனாக வாழ்ந்தான். உழைத்தான். பெயரும் பரவியது. புகழும் ஓங்கியது.

“தன் பெருமை என்ற ஒன்று மட்டும் இல்லாவிட்டால் மனித வர்க்கம்மடிந்து வெகு காலமாகி இருக்கும்” என்ற “இங்கர்சாலின்” பொன்மொழியின் பொதுக் கொள்கையில் விடுபட “காலீப்” விரும்பவில்லை. அவன் பெருமை அவனுக்கு வேண்டும். இதற்கு இடர்கட்டை “ஜாபர்.” குரோதம் குதித்தது. சூழ்ச்சி சொக்கட்டான் ஆடியது. மக்கள் தலைவன் மண்ணோடு மண் பட்டு போனான்.

“அவன் பெயர் பேசக்கூடாது. அவன் புகழ் பாடக்கூடாது” இது அரசாங்கத்தின் அவசரச் சட்டம். ஆதிக்கச் சுழல் வெடி. ஆணவத்தின் அறைகூவல்.

— தமிழ்த்தென்றல்



வாழ விரும்பியவர்கள் வாயடைத்துப் போயினர். பயந்தவர் பக்கம் பார்த்து பேசினர், பகலில் அல்ல, இரவு நேரத்தின் இருட்டில். ஆனால் “மான்டீர்” அன்பை அணைத்தவன். அணையாத அகல்தீபம். ஆடாத நிறை குடம். அழியாத மலை வளம்.

தோழனது பெயரை மட்டுமா சொல்லவில்லை? கவிதையே புனைந்தான். பாடினான். ஊரெல்லாம் மேடைகள். நாடெல்லாம் கூட்டங்கள்.

அரசவை அதிர்ந்தது. ஆர்ப்பரித்தது. அலறியது.

கவிஞன் கரங்களில் கனத்த விலங்கு. விசாரணைக் கூண்டின் கதவு திறந்தது.

“ஏ அற்பமான பாடகனே! ராஜத்துரோகியை நீ எதற்காக புகழ்கின்றாய்?”

“ஜாபர் எனக்குத் தோழன். தொல்லைகளில் துணை புரிந்தவன். நாட்டின் நல்லறிவாளன். மக்கள் தம் மகிழ்ச்சி மனையில் மணம் வீசிய மலர்க்கொடி. அவனை மெச்சிப்புகழ்வது எனது வாழ்வின் அச்சாணி.”

“பணத்திற்கு, உதவிக்கு புகழ்வதே உங்கள் வேலை. அவன் கொடுத்தான். நீ பாடுகிறாய். இதோ “வைரமாலை” கொஞ்சம் புகழ்ந்து..........கவிதை கூட வேண்டாமப்பா. ஏதோ ஒன்றிரண்டு வசனங்கள்..........”

வைரமாலை லஞ்சமா? ஒளி வீசும் உன்னதப் பொருளா? ஆதிக்க வெறிக்கு புத்தியே இருக்காதா? இது அவனது எண்ணச் சுழல். கவியான் களிப்புடன் கரங்களில் எடுத்தான். பேசினான்:

“என் உயிர் இன்பமே! இனிமைத் தோழனே!

“உலகிற்கு உழைத்த உத்தம! உன் புகழ் பாடியதற்கு அரசன் என்னை கூண்டில் ஏற்றி பரிசளித்தான். நீ வாழ்க! உன் புகழ் ஓங்குக, நீ நிவிழித் தெழும் நல்ல நாள் வரை!”

அரசன், தன்னை புகழட்டுமென்று லஞ்சம் அளித்தான். தோழனை புகழ்ந்து அவன் வழி வந்த பரிசு என்று அப்பொழுதும் அவனையேதுதி செய்தான். அஞ்சா நெஞ்சன் அந்த அரும் பெரும் நல்லறிவாளன்.

“மான்டீரின்” அன்பு மாநிலம் எங்கும் மலர்க!

— தமிழ்த்தென்றல்

பிரமிக்கத்தக்க முன்னேற்றம்

மதுரையிலேயே மிகப் பெரிய ஹோட்டல்

ஒரே சமயத்தில்

400 பேர்கள் சாப்பிட இடவசதி அமைந்தது. பெண்களுக்கும், குடும்பத்துடன் வருபவர்களுக்கும் மாடியில் வசதியான இடம் உள்ளது. சுத்தம், நாவிற்கு ருசியுள்ள சிற்றுண்டிகள், சாப்பாடு, காபி இவைகளுக்கு இன்று பிரசித்திபெற்று விளங்குவது.

"நாகலக்ஷ்மி பவான்"

பிராமணாள் காபி & சாப்பாடு ஹோட்டல்

9—10, மீனாட்சி கோவில் தெரு

(சென்ட்ரல் பேங்க் எதிர்)

மதுரை

Prop:- நாகலிங்கம் ஸ்டோர்ஸ்

A. N. M.

—'ராஜம்'

— தமிழ்த்தென்றல்

அட்டைப் படக்கதை:

# அழிந்த ஆசை!

மக்களன்பன்.

அந்தி நேரத்து ஆதவன் செந்நிலையை வானமெங்கும் சிந்திக்கொண்டிருந்தான். அணையப் போகிறோமே என்ற ஆத்திரம் அவனுக்கு. ஆனால் அவனது கோபத் திரையிலே குயில்கள் கொஞ்சின. பறவைகள் தங்கள் பேடுகளுடன் கூடுகளை நோக்கிப் பறந்தன. மாருதம் வீசியது. அல்லியும், மல்லியும் மலர்ந்தன. சிரித்தன.

கண்ணகி தன் வீட்டின் பின்புறத்திலிருந்த பவழமல்லி மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். கலை பொருந்திய அவளது முகத்தில் கவலையின் ரேகைகள்......துயரத்தின் முத்திரைகள்.... ஆழமாகப் படிந்து கூத்தாடிக் கொண்டிருந்தன. இல்லை, இல்லை. ருத்திர தாண்டவமாடிக் கொண்டிருந்தன.

மாலைக் காற்றில் மருண்ட பவழமல்லி மலர்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிக் கொண்டிருந்தன. அத்துடன் போட்டியிடுவதே போல் அவளது கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்து கொண்டிருந்தன.

உலகக் குழந்தையை இருள் பூதம் விழுங்கிக் கொண்டிருந்தது.

— தமிழ்த்தென்றல்

மண்ணை நோக்கிக் கவிழ்ந்திருந்த அவளது கண்கள் விண்ணை நோக்கின.........

ஒரே சூன்யம்......இருட்டு......

மேற்குக் கோடியிலே ஒரே ஒரு விண் மீன்!

அதுவும் ஒளியற்றுத் துடித்துக் கொண்டிருந்தது.

கண்ணகி அதனை அலட்சியமாகப் பார்த்தாள்....வெறுப்பாகப் பார்த்தாள்.

நேரம் நெளிந்தது! நீண்டது!

கண்ணகியின் வெறுப்பு விறுவிறுப்புக் கொண்டது.....வேதனை, வேகத்தில் குமுறியது!

காரணம்........?

விநாடிப் புழுக்களை நிமிட மீன் விழுங்கிக் கொண்டிருந்தது.

தொலை தூரத்தில் இருந்த பாலத்தின் மேல் புகை வண்டி போகும் சப்தம் கேட்டது. "யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? என் கடன் ஓடிக்கொண்டிருப்பதே" என்று கூறுவதே போல் பறந்து கொண்டிருந்தது...எஸ்.பி. இஞ்ஜின்.

பக்கத்து வீட்டுத் தோட்டக்கார வேலன் ஒய்யாரமாகப் பாட ஆரம்

பித்தான். ஆம். அவன் மனம் மகிழ்ச்சியில் மிதந்தது. அதை அவன் வாய் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது பாட்டாக.

"சாலையிலே ரெண்டு மரம்........
சர்க்காருவச்ச மரம்...
அதிலே ஒன்று மொட்டமரம்....
மத்ததொன்று பட்டமரம்......"

அந்த நாட்டுப் பாடலிலே அவன் கை வரிசையும் கலந்து ஒலித்தது.

கண்ணகி திருக்கிட்டாள்........

அந்தப் பாட்டின் கடைசி அடிகள் அவள் மனதில் 'சுருக்' கெனத் தைத்தது.

அவள் உதடுகள் முணு முணுத்தன.

"ஆம்......நான் மொட்ட மரம் மட்டுமல்ல, பட்ட மரமும் கூட...!"

அவள் நினைவு இறந்த காலத்தைப் பிடிக்கத் தாவியது பின் நோக்கி.

X X X

என் வாழ்வு ஒரு புயல் மோதும் படகு! புரையோடும் புண்! இல்லை. அறியாமையின் பிரதிபிம்பம்! ஏமாற்றத்தின் எதிரொலி!

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன், வயிற்றுவலி எனப் படுத்த என் தாய் 'வைகுண்டம்' சேர்ந்து விட்டாள். அது எவ்வளவு தூரம் உண்மையோ எனக்குத் தெரியாது. ஆனால் என் அப்பா அப்படிச் சொல்லிக் கொண்டார். ஆகவே நான் அம்மா இல்லாமல் வளர்ந்தேன்.

அப்பா ஏழை..........அதுவும் எழுத்தாளர். கேட்பானேன் பஞ்சத்திற்கு — பட்டினிக்கு — பரதவிப்பிற்கு......? இந்த அழகில், அவரது புனைப்பெயர் என்ன தெரியுமா...?

"குபேரன்"

'வீட்டில் தான் வறுமையும், வாட்டமும் இருக்கிறதே......ஏட்டிலேயாவது செல்வமும் செழுமையும் இருக்கட்டுமே' என்று அப்படிப் பெயர் வைத்துக் கொண்டாரோ, என்னமோ!

உம். வளர்ப்பானேன்..........?

நான் வளர்ந்தேன். எங்கள் வறுமை வளர்ந்தது. அப்பாவின் வயோதிகமும் வளர்ந்தது.

அவருக்கு இருந்த ஒரே செல்வம் நான். எனக்கு இருந்த ஒரே ஆஸ்தி என் கட்டழகு!

எட்டிக்காய் வாழ்வு.........

எப்படியோ எட்டாவது வகுப்பை எட்டிப் பிடித்து விட்டேன்.

எங்கள் குச்சு வீட்டிற்குப் பக்கத்திலே ஒரு மச்சு வீடு......அழகா

> **தேன் துளி :**
> "எல்லாவற்றிலும் உன் உள்ளம் கரைந்து ஒன்றுபடட்டும். காண்கின்றவை எல்லாம் அழிவற்றவைகளே. கால தேச வரம்பு கடந்தவை."
>
> — இஸ்பினோசா.

— தமிழ்த்தென்றல்



னது...... ஆடம்பரமானது! அதிலே ............

ஒரு மராமி தாசில்தாரும் அவரது மனைவியும் வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு நாள்.........

பட்டணத்தில் படித்துக்கொண்டிருந்த அவர்களது செல்வப் புதல்வன் புண்ணியகோடி வந்தான்.

ஐயோ! தப்பு......தப்பு.

வந்தார்.

எத்தனையோ ஆலயப் பிரார்த்தனைகளுக்குப் பின் — அரச மரங்களைச் சுற்றியதன் பின் பிறந்தவர் ......இல்லை......அவதரித்தவர்.

புண்ணியகோடி............புனிதமான பெயர்! , பெயரளவில்.........செயலில்......?

அந்த அவதார புருஷர் என்னை அடிக்கடி பார்த்தார். அக்கறை காட்டினார்.........அன்பைச் சொரிந்தார்.

பக்கத்து வீட்டுக்காரர்......பலமான முற்றுகையிட்டார். என் பருவ மனம் பணிந்தது. இல்லவே இல்லை. அவர் பணிய வைத்தார்.

என்னவெல்லாமோ சொல்லிக் கொடுத்தார். எப்படியெல்லாமோ குறும்புகள் செய்தார். இன்பத்தை நாடி நின்ற என் இதயம் அவைகளைத் தடுக்கவில்லை. ஆனந்தத்தோடு வரவேற்றது. அதிலே ஒரு அலாதியான சுகத்தையும் கண்டது. அவரது ஆசைக் கயிற்றிலே ஆடும் பம்பரமாகச் சுழன்றேன். சுற்றினேன்.

— தமிழ்த்தென்றல்

அறியாத நான்!......அனுபவம் வாய்ந்த அவர்!!

பட்டணத்தில் படித்தவரல்லவா .........?

எல்லாம் படித்திருப்பார்.

தெரியாத நான்..........தேர்ச்சி பெற்ற அவர்!!!

வற்றக் காய்ச்சிய பசும்பாலைக் கண்டால், ருசி கண்ட பூனை சும்மா விடுமா?

என் மங்கைப் பருவம் அவரை மன்னராக ஏற்றது.

ஆனால் வண்டின் வன்குரலோசை மலரின் மரண கீதம் தான் என்பதை அப்போது நான் அறியவில்லை ......அறியவும் முடியவில்லை.

நாட்கள் பறந்தன.

நாங்கள் இருவரும் நேரம் கிடைத்த போதெல்லாம் சந்தித்துப் பேசினோம். சரசமாடினோம்.

அதன் விளைவு......?

தாயாகியர்கூடுண்டா?

நான் கருவுற்றேன்!

மணமாகு முன் மகப்பேறு...?

என் மனம் பேதலித்தது; பயந்தது.

மஞ்சள் கயிறு கட்டினால் தான் மணமானதென்று அர்த்தமா? மனமொத்துப் போனாலே மணமானது போலத் தானே.........?

அவர் சொல்லிய மொழிகளைக் கேட்டு சொக்கி நின்றேன். அவர் வார்த்தைகளில் அவ்வளவு நம்பிக்கை எனக்கு.

'சொர்க்கத்தைக் காட்டுகிறேன் பட்டணம் வா' என்றார்.

என் மனம் ஊசலாடியது.

அன்பு மிகுந்த அப்பாவை—இக் கற்ற கிழத்தந்தையை விட்டுப் பிரிவ தா......—?

கூடாது.

அப்படியானால்........?

ஆசையமுதத்தை அள்ளி ஊட்டும் அன்புக் காதலனை — புன் சிரிப்பிலேயே புத்துலகம் காட்டும் புண்ணிய கோடியை இழக்க வேண் டுமா......?

ஐயோ! கூடவே கூடாது!

பின்........?

மனம் குழம்பியது. கொந் தளித்தது.

வானத்தைப் பார்த்தேன். முழு மதி பந்து போல பவனி வந்து கொண்டிருந்தது. அருகிலிருந்த கரு முகில்கள் ஆமை போல ஊர்ந்து வந்தன. உருண்டன. மருண்டன. பிறகு?

சந்திரனை வளைத்து, மறைத் துக் கொண்டன.

எங்கும் இருள் சூழ ஆரம்பித் தது. அத்துடன் என் வாழ்விலும் இருள் சூழ்ந்து விட்டது என்பதை அப்போது நான் அறியவில்லை. அறிந் திருந்தால் அழிவிற்கு அழைப்பு தரு வேறு என்ன?

வெகு நேரம் பாசத்திற்கும், நேசத்திற்கும் பலமான போராட் டம் நடந்தது.

முடிவு........?

முடிவென்ன! மனசாட்சி மாண் டது. பாசம் பறந்தது.

அன்று இரவு புண்ணியகோடி யுடன் யாருக்கும் தெரியாமல் பட் டணத்திற்குப் பயணமானேன். சேர்ந்தேன். அன்புத் துணைவனு டன் ஆனந்த வாழ்வைத் துவக்கி னேன். நாள்தோறும் புதுப்புது இன்பக் கனவுகள் கண்டேன். புள காங்கிதமடைந்தேன். பூரித்தேன்.

ஆனால்........?

பௌர்ணமிக்குப் பின் அமா வாசை அழைப்பில்லாமலேயே வரு மல்லவா?

அப்படித்தான் என் இன்ப வாழ்வில் துன்பம் சூழ்ந்தது. காதல் பாதையில் வெற்றி கண்ட அவருக்கு, வேலை தேடும் முயற்சியில் வெற்றி காண முடியவில்லை. எங்கெல் லாமோ அலைந்தார். பயன் இல்லை. கைப்பணம் கரைந்தது. இருந்த ஓரிரண்டு நகைகளும் இடம் மாறி யது.

**ஆசைக்கோர் அளவில்லை!**

ஆப்ரிக்காவில் அங்கோலா பகுதியிலுள்ள பெண்க ளுக்கு நாலடி நீளம் கூந் தல் இருக்கிறது. இந்த நீளம் காணாது என்று செயற்கை கூந்தலை வேறு அவர்கள் சேர்த்து வைத்து சிங்காரித்துக் கொள்ளுகிறார்களாம்!

— தமிழ்த்தென்றல்



Telegrams: COOPFIRE. Telephone: 4361

**The Co-operative Fire & General Insurance Society Ltd.,**

**MADRAS-1.**

President: Sri. T. M. CHINNAYYA PILLAI M. A., B. L.

Transacts

Fire Insurance of all description and Motor Vehicles Insurance.

For Particulars—Apply to:—

**P. SHUNMUGAM, B.A.,**

**POST BOX NO. 1249** **MADRAS-1**



**போட்டோ மார்க்**

**சந்தனாதித் தைலம்**

எங்களிடம் அநேக வித மூலிகையினால் தயார் செய்யப்பட்ட சந்தனாதி, அரைக் கீரைத்தைலமும், ஹேர் ஆயில்களும், வாரம் இரு முறை ஸ்நானம் செய்தால் கண் எரிச்சல், கண் மங்கல், கண்ணீர் வடிதல், சரீரத்தில் உஷ்ணம் முதலிய வியாதிகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும்.

**பொன்னு விலாஸ் சீயக்காய் பவுடரை உபயோகியுங்கள்.**

**Pro: V. M. சேர்மச்சாமி நாடார்,**

எண்ணைக் கடை,

M. S. பட்டணம் பொடி ஏஜண்டு,

ஷாப் வியாபாரம், தெப்பத்திற்கு மேல்புறம், விருதுநகர்.

— தமிழ்த்தென்றல்

எங்கேயென்று கேட்கிறீர்கள்...?

கெட்ட கழுதைக்கு அடைக்கலம் குட்டிச் சுவர் — பிணத்திற்கு போக்கிடம் சுடுகாடு.

கஷ்ட காலத்தில் கைவிட்டுப் போகும் நகைகளுக்கு.........?

மார்வாடி கடை!

அப்புறம் என்ன.........?

ஒரு நாள் வேலை தேடுவதற்காக வெளியே போனார். போனவர், போனவரே தான்!

எங்கேயா......?

எங்கள் ஊருக்கு......! அவரது அப்பா அம்மாவிடம் தான்.

ஆமாம். இது எனக்கு முன்பே தெரியவில்லை. பின்பு நான் உணர்ந்தேன்......! உருகினேன்!

நடக்கக் கூடாதது நடந்து விட்டது. பிறகு என் கதி......? அதோ கதி தான்!

வருவாரென வழி பார்த்து நின்றேன் நான்......இல்லை......நாங்கள் ......

இவ்வளவு தூரம் சொல்லிய பின் வெட்கமென்ன......? ஒளிவு மறைவு என்ன?

நானும் என் வயிற்றுக் குழந்தையும் தான் எதிர்பார்த்து நின்றோம்.

ஏமாந்தோம்......!

நான் செய்வதறியாமல் செயலற்று நின்றேன். அழுதேன். ஆற்றுவாரேது? தேம்பினேன். தேற்றுவாரில்லை.

— தமிழ்த்தென்றல்

மதுவுண்டதும் மலரை மறந்தேகும் வண்டை — ஆசை வார்த்தைகளைக் கொட்டி, ஆலகால விஷத்தைத் தந்த என் காதலனை — காதலனாகக் கொஞ்சி, காதகனாக மாறி விட்ட அந்த வஞ்சகனை — அப்படியே கொன்று விட வேண்டுமென்ற குமுறல்......!

ஆனால்......! அது முடியுமா?

கிரியின் முன் பாம்பின் சீறல் எம்மாத்திரம்? பூனையின் முன் எலி போர் முரசு கொட்ட முடியுமா? முதலையின் மேல் முயல் முற்றுகையிட்டு ஜெயிக்க முடியுமா?

ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது. ஆனால் ஆசையின் ஆவேசம் அடங்கி விட்டது.

அன்று சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கம் போய்க் கொண்டிருந்தேன். எங்கே போகிறேன்...? எதற்காகப் போகிறேன்? என்ற கேள்விகளுக்கு எனக்கே விடை தெரியாது. அப்படிப்பட்ட மனநிலையில் இருந்தேன்.

எதையுமே ஆராயவோ, அறிந்து கொள்ளவோ திராணி இல்லாத சமயத்தில்......

**தேன் துளி:**

அவர்களுடையதல்லாமல் வேறு எந்த சக்தியும் மக்கள் தம் விடுதலைக்கும் — நல்வாழ்விற்கும் — உதவுவதாக இருக்காது.

— மாக்ஸிம் கார்க்கி.



முதுகின் மேல் ஒரு தட்டல்...... பலமான தட்டல்......!

திடுக்கிட்டுத் திரும்பினேன்.

எதிரே என் பள்ளித் தோழி பார்வதி நின்று கொண்டிருந்தாள்.

அப்போது அவள் எனக்குத் தோழியாகத் தோன்றவில்லை. தென்படும் தெய்வமாக — கண்கண்ட கடவுளாகக் காட்சியளித்தாள்.

அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதேன். அனைத்தையும் கூறினேன்.........அவளும் வருத்தப் பட்டாள்.

பிறகு......வற்புறுத்தி என்னை எங்கள் ஊருக்கு டிக்கட் வாங்கித் தந்து வழியனுப்பினாள்.

அவள் கடமை முடிந்தது. போய் விட்டாள்.

எப்படி என் தந்தையின் முகத்தில் முழிப்பது......?

இந்தக் கேள்வி என் மனதில் எழுந்து விடை காணாமல் விழித்துக் கொண்டிருந்தது.

வண்டி ஓடிக் கொண்டிருந்தது.

இரவு மணி பதினொன்று!

வண்டியை விட்டு இறங்கினேன். வீட்டை நோக்கி நடைப் பிணம் போல நடந்து சென்றேன்.

எதிரே......ஊர்வலம்.......கலியாண ஊர்வலம்........கண்கொள்ளாக் காட்சி! இரவைப் பகலாக்கும் வர்ண விளக்குகள்........வாண வேடிக்கைகள்!

கூட்டம் பக்கத்தில் வந்தது.

ஆ......மணமகன்......?

என் காதலன்.........புண்ணிய கோடி!


ஆம், அவரே தான். சந்தேகமில்லை. அருகில் எதிர் வீட்டு எழிலரசி மாதவி......

என் உடல் பலமாக நடுங்கியது. ஒடுங்கியது.

மா...த...வி...என் வாய் முணுமுணுத்தது. முணங்கியது.

ஆம்...! பேதை அவள் மேல் நான் பொறுமைப்படவில்லை. அனுதாபப்பட்டேன். கோபங் கொள்ளவில்லை; இரக்கப்பட்டேன். பட்சாதாபப்பட்டேன்.

பாவம்! அவள் என்ன செய்வாள்? அவளால் பெரிய மனிதர்கள் சேர்ந்து செய்யும் காரியத்தை தடுக்க முடியுமா? புண்ணிய கோடியைப் பற்றி அவள் அறிவாளா? அறிந்தாலும் அதை எடுத்துச் சொல்ல ஏது தைரியம்...? அப்படியே எடுத்துச் சொன்னாலும் பெரியவர்கள் இந்த


உபயோகத்தில் சிறந்தது
K.S. சுப்பையா பீடி
பண்டல் லேபில் ரிஜிஸ்டர் நெ. - 103718.


சிங் லேபில் ரிஜிஸ்டர் நெ. - 142023.
K. சுப்பையா நாடார்


— தமிழ்த்தென்றல்

"சின்ன விஷய"த்தை செவியில் போட்டுக் கொள்வார்களா?

அது இல்லை.

மாதவி.......அந்த காமுகனின் வலைக்குள் தள்ளப்படும் கஸ்தூரி மான். அவனது இழி காமத்திற்கு இரண்டாவது பலி!

எப்படி எண்ணி சமாதானம் அடைந்தாலும் என் பெண் மனம் பொறுமியது. புலம்பியது. கொந்தளித்தது.

குடிசையின் கோபம் கோபுரத்தை சாய்க்க முடியுமா?

கண்களைப் பொத்திக் கொண்டு வீட்டை நோக்கி ஓடினேன். என் குடிசை இருந்த இடம்தெரியவில்லை. ஆமாம். இருட்டில் ஆழ்ந்துக் கிடந்தது. என் மனம் திகிலடைந்தது. அடிமேல் அடி வைத்து நடந்தேன். இல்லை நுழைந்தேன். உள்ளே அகல் விளக்கொன்று மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. எண்ணெய் இல்லாததால் இதோ அணையப் போகிறேன் என எச்சரிக்கை செய்தது. என் கண்கள் சுழன்றன. ஒடிந்து போன தட்டு முட்டுச் சாமான்கள் புழுதி நிறைந்து பூனை தூங்கும் அடுப்பு......அண்ணாந்து பார்த்தால் ஆகாயம் முழுதும் தெரியும் கூரை ......மேடும் பள்ளமும் சம உரிமை காட்டும் தரை...கிழிந்து போன பாய் ......பஞ்சு புறப்பட்ட தலையணை..... அதன் மேல் என் தந்தை முனகிக் கொண்டிருந்தார்.........என் துக்கம் எல்லைக் கோட்டைத் தாண்டியது.

ஒரே கதறல்......!

— தமிழ்த்தென்றல்

"அ ப் பா......"

என் தந்தையின் மூடியிருந்த கண்கள் மையத்திறந்தன. என்னைத் துருதுரு வெனப் பார்த்தன.

"க ண்...ண...கி......!"

"அப்பா...அப்பா!"

நான் அழுதேன்.

"அப்பா.........? அம்.........நான் உனக்கு அப்பா தான்! களங்கக் கரை படிந்த நீ என் மகள் தான்!... கற்பிழந்த நீ என் மகள் தான்...... ஆனால்.....என் அருந்தமிழ் நாட்டில் பிறந்தவள் என்று சொல்லிக்கொள்ளக்கூட அருகதையற்றவள்......... யோக்கியதையற்.........

வார்த்தைகள் முடியவில்லை. வாய் அடைத்துக் கொண்டது.

அணையப் போகும் விளக்கின் அந்திம ஒளி அது.

விசனம் மண்டிக் கிடந்த அவரது முகத்திலேவிரக்தி பொங்கியது. நெஞ்சு ஒரு முறை உயர்ந்து தாழ்ந்தது.

எங்கிருந்தோ வீசிய குளிர் காற்று அகல் விளக்கை அணைத்துச் சென்றது. குடிசை வீடு கும்மிருட்டில் வீழ்ந்தது. ஆழ்ந்தது.

### மாறுதலே இல்லையா?

அழகர்: "சே! என்னப்பா உலகம். இருபத்தாறு வயதாகிறது. ஒரே வேலை தான். ஒரு மாறுதலும் இல்லை. இன்னும் மூனு வருசம் கழித்தாவது..............."

சாமி: இருக்கும் மிஸ்டர் இருக்கும். கண்டிப்பாக வயது இருபத்தொன்பதாகி இருக்கும்!



நான் தனியாக அழுதேன். அழுதேன். அழுது கொண்டே இருந்தேன்.

விடியற்காலை.

ஊரார் வந்தனர். என்னைப் பற்றி தாறு மாறாகப் பேசினர். என்னவெல்லாமோ சொல்லி ஏசினர்.

என் தந்தையை — அவரது கதைகளை......கவிதைகளை.....கட்டுரைகளைவானளாவப்புகழ்ந்தார்கள். போற்றினார்கள். நிதி திரட்ட நீண்ட திட்டங்கள் வகுத்தார்கள்.

அதே சமயத்தில் எதிர் பாரா விதமாக கைலாசப் பதிப்பகத்தாரிடமிருந்து ரூ 500/- செக் வந்தது. ஆம், அது என் தந்தை எழுதிய "கற்பின் பெருமை" என்ற கதைக்குக்கிடைத்த பரிசு!

தந்தை கற்பை காப்பாற்ற கதைகள் எழுதினார். மகளோ கற்பிழந்தவள்......!

ஈமச் சடங்குகள் முடிந்தன. எல்லோரும் போய் விட்டார்கள்.... போகும்போது எல்லோரும் என்னை முறைத்துப் பார்த்தனர்.

நான் மௌனமாக நின்றேன். மரம் போல நின்றேன். மண் சிலை போல நின்றேன்.

என் உள்ளத்தில் இன்று ஒரே சிந்தனை......?

மானமிழந்த நான் இனி வாழ்வதா? வீழ்வதா......?

x x x

இரவு. நள்ளிரவு. எங்கும் அமைதி......மரண அமைதி. ஊர் தூங்கிக் கொண்டிருந்தது. மாலையிலிருந்து மரத்தடியில் உட்கார்ந்திருந்த கண்ணகி சட்டென்று எழுந்தாள். ஏதோ முடிவுடன் முன்னேக்கி நடந்தாள். ஓட்டமும் நடையுமாக விரைந்தாள். அவள் முகத்திலேஒரு அமைதி.......ஆனந்தம்! நடையிலே ஒரு விறுவிறுப்பு...

வெகு தூரத்தில் காவேரியாற்றின் சலசலப்பு...

எங்கிருந்தோ கூவும் ஆந்தையின் அலறல்......

கண்ணகி ஆற்றை நோக்கிப் பறந்து சென்றாள். இறந்து வீழ.

கரை புரண்டு ஓடும் ஆற்றின் வெள்ளம் அவளுக்கு கனிவுடன்நல் வரவு கூறியது. அவ்வளவு தான்!

"தடால்......"

எத்தனையோ குமுறிய பேதையுள்ளங்களுக்கு அமைதி யளித்த அன்னை காவேரி இவளுக்கும் அபயமளித்து, அணைத்துக் கொண்டாள் போலும்.

கண்ணகி மட்டுமல்ல, அவளுடன் அரும்பிய ஒரு மொட்டு மலராமலேயே மறைந்து விட்டது.

— தமிழ்த்தென்றல்

# மொழியாராய்ச்சி

வித்துவான், ந. சேதுரகுநாதன்.

(முன் தொடர்ச்சி)

(103) ஆன்மா என்பது இனிய தமிழ்ச் சொல். அதன் உண்மையியல்பினை ஆராய்ந்து அது பற்றி வினையோர் கூறியன பொருந்தாமையை நோக்குவோம். தமிழின் கண்ணிருந்து முழுதும் உருவம் திரியாமல் வடமொழியாளர் எடுத்துக் கொண்ட சொற்களை நாம் தமிழென்பது காட்டுதலும் தமிழ் வழக்கில் எழுதியும் பேசியும் பாடியும் போற்றுதலும் இன்றியமையாது செய்ய வேண்டுவதொன்றாகும். தமிழிலிருந்து சொற்களை எடுத்து முன்னும் பின்னும் துணையசைகள் சேர்த்தும் தொகுத்தும் விரித்தும் நிலை மாற்றியும் மற்றும் பல வகையாகவுந் திரித்தும் அவர்கள் ஆக்கிய சொற்களை ஆராய்ந்து இன்னின்ன சொற்களை அவர்கள் இன்னின்னவாறு திரித்திருக்கின்றனர் என்பது காட்டினாலன்றி, அவர்கள் நம் சொற்களை எடுத்துத்திரித்தமைத்துக் கொண்டு அந்தச் சொற்களிலிருந்து நம் சொற்கள் வந்தன என்று கூறுவதைத் தடுக்க முடியாது. ஆனால் அவர்கள் திரித்த திரி சொற்களைத் தமிழில் நாம் வழங்கக் கூடாது; அவ்வாறு வழங்குவது தமிழ் மொழிக்கு ஓசை வகையால் தீங்கு பயப்பதுடன் தமிழை மலையாளம், கன்னடம் முதலியன போன்று (அந்தத் திரி சொற்கள்) திரித்து மாற்றியும் விடும். இது பெரியதோருண்மை. திருவாய் மொழிக்கு உரை வரைந்த பெரியோர்கள் இவ்வாறு திரி சொற்களுஞ் செந்தமிழ்ச் சொற்களுங் கலந்து எழுதினமையால் அது மணிப் பிரவாளமென்று பெயர் பெற்று ஒரு தனி மொழி போன்று பிரிந்ததை அறிஞர்கள் நன்கு உணர்வார்கள்.

அதுவுமன்றித் தமிழிற் பண்டு இல்லாதனவாய்ப் பின்பு காலப் போக்கிற் பிறந்தனவும், முன்பு முதனிலைகள் மட்டும் உடையனவாக இருந்து பின்பு ஒட்டுச் சொற்களாய் விரிந்தனவும், செய்யுள் வழக்கில் வருமல் நாட்டு வழக்கில் மட்டும் நின்றனவும் ஆகிய எத்துணையோ சொற்கள் உள்ளன. அவற்றை எல்லாம் பண்டைச் செய்யுட்களில் இல்லை என்றும், உரை நடைகளில் இல்லை என்றும் கூறி ஒதுக்கி விடுதல் கூடாது. அவ்வாறு பழைய செய்யுட்களில் இடம் பெறாதனவாய் நாட்டு வழக்கிலுள்ளனவாயுள்ள சொற்களைத் திரித்து எடுத்திருந்தாலும் அச் சொற்கள் தமிழிலிருந்து பிறந்தன என்பதனைக் காட்டுதலும் வேண்டும்.

எடுத்துக்காட்டாக ஒன்று கூறுகின்றேன். 'சீலை' என்ற சொல் இப்போது எல்லோராலும் நன்கு வழங்கப்படும் சொல். இச்சொல் பண்டையிலக்கியங்களில் இல்லை. ஆகவே நம் நாட்டிலுள்ள பிற மொழியிலும் இச் சொல் சென்று சேர்ந்து வழங்கிய பின் நாம் அதனைப் பண்டை நூல்களில், இல்லாமை கொண்டு தமிழன்று என்று சொல்வதும் பிற மொழியிலிருந்து தமிழுக்கு வந்தது என்று கூறுவதுஞ்சாலாது. பண்டு 'சீரை' என்றும் 'சிதார்' வழங்கி வருஞ் சொற்களுள் சீரை என்பதன் போலியே சீலை என்பது என்று அறிவித்துத் தமிழ்ச் சொல் என்பதனை நிலை நாட்ட வேண்டும். சீலை என்பதே சேலை என்று திரிந்தது என்று கருத இடமுண்டு. சேலை என்பதே சீலை என்று திரிந்தது என்று பலர் கூறுகின்றனர். 'சீரை' என்ற பழைய சொல் அதனை மறுக்கின்றது. ஆகவே நம் நாட்டு வழக்கிலுள்ள ஒரு சொல்லின் பழைய வடிவத்தினை ஆராயும் போது அதன் பல்வேறு வடிவமும் உணருவதற்குவழி பிறக்கின்றது.

எனவே இம்முறை கொண்டு ஆன்மா என்ற சொல்லை நாம் ஆராயும் போது இது மிகவும் பழங்காலத்தில் வழங்காமை கொண்டு தமிழன்று என்று கூறுதலும் வடமொழியிலிருந்து வந்தது என்று கூறுதலும் பெருந்தவறு.

ஆன் என்பது பசு. மா என்பது விலங்கு. ஆன்மா என்றால்பசுவாகிய விலங்கு என்று பொருள் தரும். அது உருவக வகையாக உயிருக்குப் பெயராக வழக்கப்பட்டது. இது எவ்வாறு பொருந்தும் என்பதை இனிக் காண்போம்.

உலகில் உள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் மக்கள் தாம் உயர்ந்த பொருள். அதனாலே தான் மக்களை உயர்திணை என்றனர். மக்களில் ஒருவனுக்கு உவமை சொல்லும் போது அவனினும் உயர்ந்த தெய்வத்தைச் சொல்லுவது இயல்பு. கடவுளுக்கோ அப்






— தமிழ்த்தென்றல்

எதுவும் எழுதலாம்! பேசலாம்!!

ஆனால்?

செயலில் செய்து காட்டுவோர் சிறிதளவே.

இமிடேசனை வைரம் எனப்புகழலாம்—அதில் ஏமாறு வோர் வெகு சொற்பம்.

உண்மை அறிய இன்றே விஜயம் செய்யுங்கள்.

**"ஸ்ரீ முனியாண்டி விலாஸ் மில்டேரி ஹோட்டல்"**

(நாகலிங்கம் ஸ்டோர்ஸ் பக்கம்)

தெற்கு காவல்கூடத்தெரு, மதுரை.

**மிகச்சிறந்த மில்டேரி ஹோட்டல்?**

"ராஜம்"

உங்கள் தோற்றத்திற்கு தகுந்த ஆடைகள்

அவை மில் துணிகளாயினும் சரி,

கைத்தறி துணிகள், சேலைகளாயினும் சரி

நிரந்தரமான ஸ்தாபனம்

**நாகலிங்கம் ஸ்டோர்ஸ்**

(ரிஜிஸ்டர்டு)

தெற்கு காவல்கூடத்தெரு, மதுரை.

போன்:—447.

—ராஜர்.


— தமிழ்த்தென்றல்




முகப்பரு, சேத்துப்புண், சொரிசிரங்கு, கரப்பான் முதலியவைகளுக்கு கைகண்ட நிவாரணி

**"சோறல்"**

சகல சருமரோக களிம்பு.

*    *    *

குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், அஜீர்ணம், வயிற்றோட்டம் முதலியவைகளைப் போக்கி ஆகாரத்தை சமநிலைப்படுத்தி குழந்தைகளை ஆரோக்கியத்துடன் வளர்க்கும்.

ஆரேன்ஸ்

**கிரைப்-டில்-வாட்டர்**

தயாரிப்பாளர்கள்:

**பாரத் டிரக்ஹவுஸ், மதுரை.**

"ராஜம்"

சுத்தம், சுகாதாரம், நாவிற்கு ருசி, எல்லாம் ஒருங்கே அமைந்து இன்று பிரசித்திப் பெற்று விளங்குவது இது ஒன்றே.

**இன்றே விஜயம் செய்யுங்கள்.**

இடம்:

சித்திரை 1-வது தெரு,

வடக்குச் சித்திரை வீதி,

(மொட்டைக்கோபுரத்திற்கு மேல்புரம்)

**"நடராஜா லாட்ஜ்"**

மதுரையில் மிகச் சிறந்த புதிய

**பிரியாணி & சாப்பாடு ஹோட்டல்**


— தமிழ்த்தென்றல்

படி வேறு உவமையில்லை. கடவுளை யும் உயிரையும் பற்றிப் பேசும் போது உயர்ந்த பொருளைத் தான் உவமை கூற வேண்டுமென்ற ஒழுங் குக்கு இடமில்லை. கடவுளுக்கு அவ ரினுந் தாழ்ந்த மக்களினும் மக் களுக்கு அவர்களினுந் தாழ்ந்த விலங்குகளினுந்தான் உவமை தேடி எடுக்க வேண்டியதிருக்கின்றது, இந்த இயல்பினைத் தாண்டி வேறு வகை பேசுதற்கு எந்த நாட்டினர்க் கும் எந்தச் சமயத்தினர்க்கும் வழி இல்லை.

ஆகவே சைவ சமயத்தினர்சிவ பெருமானை மாடு மேய்க்கும் ஒரு கோனாகக் கொண்டு பசுபதி என்று கூறினர். வைணவர்களும் கண் ணனை இடையன் என்று கூறி உயிர்களை மாடுகள் என்றும் ஆடு கள் என்றும் இவ்வாறு உருவக வகையாகப் பெயர் வைத்தனர். கிறித்தவ நெறியினரும் கிறித்து நாதரை மேய்ப்பராகவும், உயிர் களை ஆட்டுக்குட்டிகளாகவும் கூறி னர். வேறு எவர் கூறினும் இவை போன்ற முறையாகத் தான் கூற இயலும். ஆகவே விலங்குகளில் உயர்ந்த பசுவினை உயிர்க்கு உருவ கப் பெயராகத் தமிழர் வழங்கினர். அவ்வாறு வழங்கும் போது பசு என்பதற்கு ஈடாக உள்ள 'ஆ' என்ற சொல்லை வழங்கத் தொடங்கி அது ஓரெழுத்து ஒரு மொழியாய் நிற்பதுடன், 'பதி' 'ஆ' என்று வழங்கும் போது 'ஆ' என்பது இடையூறற்ற காலத்தில் இரங்கி ஒலிக்கும் ஒலி போல் தோன்று

தலுங் கூடுமாதலாலும், 'ஆன்' என்னும் முழு இனிமையும் சிறத்தலின் மையாலும், 'அரி' என்பதனை அரிமா என்றும், நரி என்பதனை நரிமா என்றும் வழங்குவது போன்று 'ஆன்' என்பதுடன் 'மா' என்ப தனைச் சேர்த்து 'ஆன்மா' என்று விரிவுடையதாக்கி இனிமைப் படுத்தி வழங்கினர். பசு, பதி, பாசம் என்ற சொற்களில் வரும் பசு என்பதற்கு பொருள் எதுவோ அதுவே ஆன்மா என்பதற்குப் பொருளாதலும் 'னகர மொற்றும் ஆவும் மாவும்' என்று ஆசிரியர் தொல்காப்பியனாரும், 'ஆமாகோனவ்வணையவும் பெறுமே' என்று நன்னூலாருங்கூறி 'ஆ' என் பது னகரம் பெறும் என்று விதித் தமையுங் காண்க. ஆகவே கடவுள் நெறியை மிகவும் வளர்க்கத் தொடங்கிய தமிழர்கள் இவ்வாறு ஆக்கி வழங்கிய சொல்லை வட மொழியாளர் எடுத்து வழங்கிக் கொண்டன ரென்பதும், அவர்கள் தமிழ் எழுத்துக்களைத் திரித்து எழுத் துக்கள் ஆக்கிக் கொண்ட போது




— தமிழ்த்தென்றல்



னகரத்தை எடுத்துக்கொள்ளவில்லை ஆதலால் அது இருக்கும் இடத்தில் 'த்' கரத்தை வைக்கத் தொடங்கி 'ஆத்மா' என்று ஆக்கினர் என்பது வும்தெள்ளத்தெளிய அறிந்துபேணக் கூடிய உண்மைகளாகும். இவ்வா றிருப்பவும் 'ஆத்மா' என்ற சொல் லைத்தான் தமிழ் கடன் வாங்கிற்று என்று ஆராய்ச்சியறிஞர்கள் கூறு வது எவ்வகையினுஞ்சாலாது என் பதுவும் மனங் கொளற்கு உரியது.

(107) ஆலயம் ஆன்மா என்ற சொல்லின்கண் னகரத்தைத் தகர மாக்கினதுபோல்'ஆனிலையம்' என்ற சொல்லின் கண்'னி'என்றனகர இக ரத்தைமுற்றும் நீக்கி 'ஆலையம்'என் றாக்கி'லை' என்பதனை 'ல' என்றாக்கி 'ஆலயம்' என்றாக்கிக் கொண்டனர். 'ஆன்' ஆகிய உயிர்களை நிலைத்த அமைதி பெறச் செய்வதே 'ஆனி லயம்' எனப்படும், அதுவேகோயில். கோவிலைப் பழந்தமிழர் 'ஆனிலை' என்ற சொல்லாலும் வழங்கினர். 'கருவூர்த்திருவானிலை' என்பது அங் குள்ள கோவிலின் பழைய பெயர். 'ஆனிலை' என்பதில் அம் சேர்த்தால் ஆனிலயம் ஆகிறது. 'ஆலயம் என் பதற்கு உயிர்கள் லயப்படும் இடம் என்று வடமொழிப் பொருள் கூறு கின்றார்கள்.

(108)'நிலயம்' என்ற சொல்லிலுள்ள 'நி' என்பதனை நீக்கியே 'லயம்' என்ற சொல்லாக்கிக் கொண்டனர். 'லயித்தல்' என்பது நிலைத்தலே யாகும்.

(109) அநிலம் என்பது காற்று என்ற பொருளில் வடமொழியா ளர் வழங்கும் சொல்.

— தமிழ்த்தென்றல்

நில் என்பதும் அம் என்பதுஞ் சேர்ந்தே 'நிலம்' என்ற சொல் உண் டாயிற்று. நிலை பெற்றிருப்பது என்று பொருள். நிற்றல் செய்யா தது காற்று; இயங்கி ஓடிக்கொண் டேயிருப்பதாதலின் 'நில்' என்பதன் முன் 'அல்' என்பதனைச் சேர்த்து ஈற்றில் 'அம்' சேர்த்து ''அனிலம்'' என்றாக்கி ஈண்டும் 'ன' கரத்தை 'ந' கரமாக மாற்றி 'அநிலம்' என்றாக் கினர். 'நில்' 'அல்' என்ற பகுதி களை 'அநிலம்' என்ற சொற்படைத் தற்கு உதவிய தமிழ்ச் சொற்கள் என்க.

(110) மாயை என்பது வட சொல்லென்றுபலர் கூறுகின்றனர். 'மாய்' என்பது தமிழென்பதனை மறுப்பவரெவருமிலர். ''களிறுமாய் கழனி'' என்ற இலக்கிய வழக்கில் 'மாய்' என்பது மறைத்தல் என்ற பொருள் குறித்து வருகிறது. மாயை யும் மறைத்தற் றொழில் புரிவதே யாகும். 'மாய்தல் ஆதல்' என்ற இரண்டு சொற்களின் முதனிலை களையும் இணைத்து ஒட்டுச்சொற் களாக்கி 'மாயா' என்று வடமொழி யாளர் வழங்கினர். தமிழில் 'மாயை' என்று வழங்குவதனையே ஆகாரஈறுஐகார ஈறாய்த்திரித்தனர்

**தேன் துளி:**

''வாழ்க்கை ஒரு வில். அதன் நாண் கனவாகும். அதைப்பூட்டும் வில்லாளி எங்கே?''

—ரோமா ரோலான்

எனினும் அமையும். "மாய்ந்தான்" என்றால் அவன் மறைந்தான் என்பதே பொருள். ஆகவே சமயநெறி பற்றிய சொற்களில் மாயை என்பதும் தமிழிலிருந்து ஆக்கிய சொல்லே என்பது தேற்றம்.

(111) பதி என்பது இறைவனைக்குறிக்க வழங்கிய சொல். வதிதல் என்பது தங்குதல் என்று பொருள்தரும். 'வ' 'ப' இரண்டும் ஒன்றற்கு ஒன்று மாறிவருதல் தமிழில் இயல்பு. வதிதல் என்பதன் மாற்றமே பதிதல் என்பதாகும். பதிதல் தங்குதல் என்ற பொருள் தரும். தங்கும் ஊரினைப்பதி என்பது பண்டைவழக்கு. உயிர்தொறும் தங்கிப்பதிந்திருக்கும் இறைவனை 'பதி' என்றும், அந்தப் பதியினைக் காணவொட்டாது மறைத்து நிற்கும் மறைப்பினைப் (112) 'பாசம்' என்றும், அந்தப்பாசமாகிய பசுமையை உடைமையால். (113) "பசு" என்றும் நன்கு விளங்கித்தோன்ற பசு, பதி, பாசம் என்ற மோனைக் கட்டுடன் இனிமைநயம் பொருந்தத் தமிழர் சொற்கோவைகளாக்கி வழங்கினர். இவற்றையே வடமொழியாளர் அப்படியே முழுச் சொற்களாக எடுத்து வழங்கினர் என்பது தெற்றெனத் தெளியக் கூடிய உண்மை.

நீரோட்டத்தில் உண்டாகும் பாசிக்குப் பசுமை உடைமையாலேயே அப்பெயர் ஏற்பட்டது. கல்லின் மேல் நீரோடுதலால் வழுக்குப் பிடித்தால் அதனைப் பாசம் பிடித்த கல் என்கின்றோர். அந்தப்பசிய நிறம் உள்ள பாசம் கல்லை மறைத்து விடுகிறது. அதுபோன்று உயிரினைப் பற்றி நிற்குஞ் செயற்களிப்பு போன்றபாசம் உயிரினை மறைத்து நிற்றலாலும் பாசம்போன்றமையாலும் 'பாசம்' என்றனர். அந்தப் பாசமாகிய பசுமையை உடைமையினாலேயே உயிர் 'பசு' எனப் பட்டது. இவ்வாறு பகுதிப்பொருள் நயமும் காரணகாரியத் தொடர்பும் உடையனவாய் அமைந்த இந்தத் தமிழ்ச் சொற்களுக்கு வேறு புதிய கற்பனைப் பகுதிகள் கற்பித்துக்கூறி வடசொல்லென்றனர் வடமொழியாளர். அதனையே செவியிற் கேட்டுக்கொண்டு தமிழ் ஆராய்ச்சியாளருஞ் சொல்வதென்றால் அந்தோ ஈதென்னே கருமம் என்று தானே நினைக்கத் தோன்றும்.

[தொடரும்]




— தமிழ்த்தென்றல்

# மண்மேட்டுக் காதல்

வி. நேரியப்பன்.

பாண்டி பண்ணை வீட்டுப் பையன். பரவச பங்களாவில் பிறக்கும் பாக்யம் பெற்றவன். இதற்காக அவன் பழகுவதும் பண்ணை வீடுகளாகவே இருக்க வேண்டும் என்று யாராவது சொல்ல முடியுமா? பண்ணையார் பரந்தாமனார் இப்படியே ஆசைப்பட்டிருக்கலாம். ஆனாலும் இதைத் தவிர மற்றொரு பண்ணை இல்லாத அந்த சிற்றூரில் பாண்டி போக மற்றொரு பண்ணை வீட்டு பளிங்குக்கல்முற்றம் எப்படிக் கிடைக்கும்?

## வாக்கு அளிக்கும் நாக்கு!

ஆகவே தான் அவனது பள்ளிப் பிராயத்தில் பார்வதியுடன் உயிருக்கு உறைவிடம் இருதயமாக — உறவாடி வந்தான். பாண்டியை பார்த்து விட்டாலே போதும் அவளுக்கு பத்து பலாச்சுளைகளை விழுங்கி விட்டு நாக்கைச் சப்பைக் கொட்டுவது போல் இருக்கும். இனிக்கும்.

பார்வதி என்றாலோ அவனைப் பொறுத்தவரை காய்ச்சி முறுகின பசும்பால். அதுவும் கட்டி சேர்ந்த பாலாடையின் பக்குவ ருசி!

பால்யத்திலேயே பாண்டியிடம் இப்படி ஒரு பண்பு இருந்தது. எப்பொழுது பார்த்தாலும் "சோதை" சேர்த்துக் கொண்டே திரிவான். பண்ணை வீட்டுப் பிள்ளை என்பதால் மற்ற சிறுவர் சிறுமிகளுக்கு இவனிடம் அலாதி பயம். பணிவு. ஆனால் இவனோ அவர்களை அன்பால் ஆதரவுப்பேச்சால் கவர்ந்திருந்தான். இந்த குதூகலக் கும்பலின் மணிமகுடம் பார்வதி! எப்படிப் பார்த்தாலும் அவள் அவனது வலக்கை. வாக்கு அளிக்கும் நாக்கு. ஏன் ஒலிபெருக்கியும்கூட.

## அப்படி ஏன் வலைவட்டம் போடுகிறது?

அவ்வூர் ஆற்றின்நடுவே அழகு தந்து நின்ற அந்த மண்மேட்டில் மாலை நேரத்தில் இவர்கள் ஆடிப் பாடும் விளையாட்டு ஆரவாரம் ஊர் முட்ட எதிரொலித்து நிற்கும். "சடுகுடு" என்றாலும் சரி, "நொண்டிக் கால்" ஆனாலும் சரி, "கிளித்தட்டு" ஆட்டமாயினும் சரி, பாண்டியும்

— தமிழ்த்தென்றல்

பார்வதியும் எதிர்க்கட்சி கட்டித் தான் ஆடுவார்கள். அதில் தான் அவர்களுக்குத் தனி இன்பம் அருவி பாய்ந்தது. விளையாட்டு மகா விறுவிறுப்பாக வளரும். உற்சாகம் கரை புரளும். இந்தச் சின்னஞ்சிறு காகிதப் படகுகள் பரவசத்தில் மிதந்து வர இறக்கை இல்லாது பறந்து பறந்து தாவும்!

வெற்றி தோல்வியில் இவர்களிடையே ஆத்திரமும் பொறாமையும் வரத்தான் செய்யும். "உம்" என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாலும், முதலில் பேசுவதில் பாண்டிக்குத் தான் முதல் பரிசு. இதைப் பற்றித் தான் அவன் கவலையோ, வெட்கமோ கொள்வது கிடையாதே!

பேசாத பிள்ளை இருக்குமா என்று கேள்வி போட அவன் என்ன சிறுகதை சிற்பியா? அல்லது சிந்தனைச் செல்வனா? அது பேசாமூன் சிரிக்கக்கூட செய்யும் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். இனிமையை விரும்புகிறவன் இடம், பொருள், ஏவலை எப்படிப் பார்ப்பான்? கிள்ளி வைத்து...............!

"ஐயோ" வென்று கிடக்கும் **அந்த அப்பாவி பேடையை! சுற்றிச் சுற்றி இந்த அழகுக் கொண்டை! சேவல் அப்படி ஏன் வாளா வட்டம் போடுகிறது?** இயற்கையின் நியதி — இயல்பு — எங்கும் எல்லா உயிர் வாழ்வான இடத்திலும் இப்படித் தான் இருக்குமோ?

**வாழ்வில் வண்ணமிடும் "அஜந்தா"**

அவ்வூரில் இருந்தது எல்லாம் உயர்தர எலிமெண்டரி பாடசாலை தான். ஆகவே ஹைஸ்கூல் படிப்பிற்கு பெரியகுளம் போய் வந்தான் பாண்டி. காலையில் சைக்கிளில் போகிறவன் பொழுது சாய்ந்த பின் தான் வீடு திரும்புவான்.

இதற்கிடையில் எப்படியாவது வாரத்திற்கு இரண்டு மூன்று முறை பார்வதியை அவன் பார்க்காமல் இருப்பதில்லை. பள்ளிக்கூடம் போகாத பார்வதிக்கு உணர்ச்சி உலகத்தின் அரிச்சுவடியைப் போதித்து வைக்க இந்த ஆசிரியரின் உதவி பெரிதும் வேண்டியதாயிருந்தது!

படிப்பின் வகுப்பு உயர உயர தாரமும் உயர வேண்டும். இது தானே நம் நாட்டுக் கல்வி முறையின் அழகாக இருக்கிறது. கல்லூரி

## இண்டர் தானா?

பழைய நண்பர்கள் இருவர் ரயில்வே பிளாட்பாரத்தில் சந்திக்கின்றனர். வண்டி வருகிற நேரம்.

அரசு: "என்ன மிஸ்டர் சேகர்! நீங்கள் இண்டர் தானே....."

சேகர்: "அடேடே! அதெல்லாம் இரண்டு வருடங்களுக்கு முந்தியல்லெ. இப்போ சீனியர் பி. ஏ."

— தமிழ்த்தென்றல்



படிப்பிற்கு பாண்டி கிளம்பிய அன்றைக்கு ஊர் தெய்வங்களை எல்லாம் ஒன்று விடாமல் வைது தீர்த்தாள் பார்வதி.

"அப்பப்பா! படிப்பு படிப்பு என்று எத்தனை வருடங்கள். பண்ணையாருக்குத் தான் என்ன குறைச்சலாம்? பையன் படித்துச் சம்பாதித்துத் தான் ஆகணுமா? எனக்கே இப்படி இருக்கிறதே. பெற்றவர்கள் எப்படித்தான் பிரிந்திருப்பார்களோ? அவர்கள் எல்லாம் முழுசா கல்லு தானோ?" சோகத் திரை மூடிய அவளது சிந்தனையில் தெறித்த எண்ணச் சிதறல்கள் இவை.

கண் கலங்கி நின்ற அந்தனை நேரத்திலும், தன்னைத் தானே எப்படி எப்படியோ தேறுதல் படுத்தி நாட்களை நகட்டினாள். என்றாலும் கூட அவளுக்கு இப்படி ஒரு சந்தேகம் இருந்தே வந்தது. "இன்னும் நான்கு ஐந்து வருடங்கள் அவர் படித்து முடித்து விட்டு வருவதற்குள் பருவத்தில் பூத்து நிற்கும் தன்னை மற்றொருவருக்கு............அப்படி மட்டும் நடந்து விட்டால்:.......தான் பெற்ற இன்பம், அதை நினைவில் போற்றி சுவைத்த சுகம், கானல் நீராகத் தான் போய் விடுமா?"

இதை கோடை விடுமுறைக்கு வந்திருந்த பொழுது பாண்டியிடம் அவள் கேட்கத்தான் செய்தாள். "எல்லாம் இந்த வருடம் மட்டும் தான். பிறகு புத்தகத்தை மூலையில் சேர்த்து விடுகிறேன்" என்றான் அவன். ஆனாலோ இந்த கண்மூடித் தனமான துணிவு அவளுக்கு சுற்றாப் பிடிக்கவில்லை. அவர், தனது **வாழ்வில் வண்ணமிடும் "அஜந்தா"** அறிவில் அழகு கொட்டும் "**தாஜ் மஹால்**" என தனிப்பெருமை பெற விரும்பினாள்.

"அது பிடிக்கலே, இது பிடிக்கலே என்று நான் எப்படியும் தள்ளி விடுகிறேன். இல்லே நாளைக்கே கல்யாணத்தை நடத்தி விட அம்மா முந்தானையில் நிறைய முடிந்தா வைத்திருக்காள். நீங்கள் படிப்பைப் பாருங்கள்" என்றாள். ஆள் ஓய்ந்த நேரத்தில் எல்லாம் அவர்களது கனிந்த காதல் அந்த மண்மேட்டில் களியாட்டம் கொண்டது.

**இப்படி ஏன் மாறி விட்டான்!**

**"மனிதனுடைய எண்ணமும் ஆர்வமும் ஏதாவது ஒன்றில் பற்றிக் கொண்டால், அது தவிர பிற செயல்கள் சோபிக்காது"** என்று **"டிக்சன்"** வலியுறுத்திய வைரமணி வசனம் யாவருக்கும் பொதுக் கொள்கை தானே! புதுப்புது அனுபவங்களை அனுபவிக்க ஆவல் மோதும் "பிஞ்சு"

— தமிழ்த்தென்றல்

புத்தகங்கள், பத்திரிகைகள்
விற்பனையாளர்கள்
தமிழ்ப்பண்ணை
[illegible]







— தமிழ்த்தென்றல்



பிராயத்தில் அவள் இவனுடைய வாழ்வில் குறுக்கிட்டு, இடம் பிடித்து மாளிகையும் அமைத்து விட்டாள்.

குறு குறுப்பான குளுமை நிறைந்த அந்த தாமரை முகமும், மோகனக் கண்களும், வெட்டும் புன் சிரிப்பும் சேர்த்து அவனை தேனில் சிறகொட்டி திகைப்படையும் ஈ எனத் திக்கு முக்காடச் செய்தன. அவன் மனதில் வளைய வளைய வந்தாள் பார்வதி.

லீவு எப்பொழுது என்றே ஏங்கிக் கிடந்தான். ஊருக்கு வந்ததும் தன் வீட்டிலேயே பார்வதி வந்திருக்கலாதா என்று ஆவலோடு துருவி துருவிப் பார்த்தான். ஆசை மனம் குமுறினால் இப்படித் தான் நேருமோ?

அன்று மாலை வெகு நேரம் வரை மண் மேட்டில் காத்திருந்தான். பயனில்லை. யார் யாரோ என்று அவன் சொல்லி விட முடியுமா? அநேகமாக பார்வதியின் தோழிகள் தண்ணீர் எடுத்துக் கொண்டுபோய்விட்டனரே! பார்வதி மட்டும் ஏனோ வரவில்லையே! அவளுக்கு உடம்பிற்கு ஏதாவது சரி இல்லையா? நினைக்கவே அவனது மனதில் நடுநடுக்கம் ஏற்பட்டது.

"கருகரு" வென்று பொழுதும் சாய்ந்து விட்டது. ஆற்றுப்பாதை வெளியில் பெண்களின் "கசமுச" சத்தம் ஒடுங்கியது போல, பறவைகளின் "கிச்கிச்" அரவமும் அடங்கி விட்டது." இனி தாமதிக்கக்கூடாது. விசாரிக்க வேண்டியது தான். ஏன் அவர்கள் வீட்டிற்கே போனால்...... சே! சே......சரி நடராசனுக்கு அடுத்த வீடு தானே! அவனிடம் கேட்டால்................?" குனிந்து நடந்தவனின் நினைப்பு இவ்வாறாக எல்லாம் ஓட்டம் காட்டியது.

ஒற்றையடிப் பாதை. எதிரே ஆள் வரும் அரவம். நிமிர்ந்தான். ஏறிட்டுப் பார்த்தான். ஆ! பார்வதி தான். இப்படி ஏன் மாறி விட்டாள். நகை நட்டு எதையும் காணோம். சேலையும்.....................ஆ! அவள் விதவையா?

"பட்டு பட்டான் : பலன் பெற்றான்"

தேம்பித் தேம்பி அழுதாள். திடப்படுத்த என்னென்னமோ பேசினான். எப்படியோ வற்புறுத்தி திருமணத்தை நடத்தி விட்டனராம். இரண்டே மாதம், "நிமோனியா" என்று படுத்தவர் பலியாகி விட்டாராம்.

— தமிழ்த்தென்றல்

## அசல் நிமோனியா !

சித்திரக்காரன் தன் நண்பனை வைத்தியனை அழைத்து வந்து தான் எழுதிய சித்திரங்களை எல்லாம் காட்டிக் கொண்டு வந்தான். கடைசியில் ஒரு படம் வந்தது. அதில் ஒரு வியாதிக்காரன் சாகப் போகும் நிலையில் எப்படி இருப்பானோ அப்படி தத்ரூபமாக சித்தரிக்கப்பட்டிருந்தது.

"எப்படியிருக்கிறது..........?" சித்திரக்காரன் கேட்டான். "அசல் நிமோனியா......!" என்றான் வைத்தியன்.

"அது சரி பார்வதி! ஆண்கள் வாழ்க்கையில் இப்படி நடப்பதில்லையா? அவர்கள் மட்டும் பெருமையாக மறுமணம் செய்து கொள்வதில்லையா? பெண்களுக்கு இவ்வுரிமையை மறுப்பது எவ்வகையில் நீதியாகும்? நான் உன்னைக் கைவிடப் போவதில்லை. விதவை என்றவுடன் உன்னுடைய அழகில் எனக்கு இன்று வேறு விதர்ப்பம் எதுவும் தெரியவில்லையே!"

சடக்கென்று அவனைத் தடுத்து விட்டு பார்வதி கேட்டாள் "உங்களது விரிந்த மனதின் தாய்மையை அப்பா ஏற்க வேண்டுமே.........?"

"இது எப்படியும் நடந்து தீர வேண்டும். அப்பாவை மட்டுமல்ல இந்த ஊரையே நம் வழிக்குத் திருப்ப வேண்டும். படித்த படிப்பை — தெரிந்த உண்மையை வைத்து செயலில் இறங்கி சீர்திருத்துவோம் சமூகத்தை" என்றான்.

"மறந்து செத்தால் உயிர் வருமா பாண்டி! பெரியவர்களை எதிர்த்தால் நம் கதி என்னவாகும்?" அவளது குரலில் நடுநடுக்கம் நிறைந்து மிதந்தது.

இதற்குப் பின் அவன் அவளுடன் இருந்த அத்தனை நேரமும் அவனையும் அவன் தம் தூய இதயத்தை போர்த்தியிருந்த பரந்த மார்பையும் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

அவர்கள் அன்று நெடு நேரம் பேசித் தீர்த்து முடிவு கண்ட திட்டத்தின்படி தான், புதுப்பட்டியில் "சேவா மன்றம்" ஏற்பட்டது. பண்ணையாரின் பிள்ளை படிப்பை நிறுத்தி விட்டு சேவையில் இறங்கி விட்டது!

யார் யாரோ தடுத்தும், என்னென்னமோ பயம் காட்டியும், ஏற்பட்ட எதிர்ப்பை எல்லாம் மீறி உலகெங்கும் வளர்ந்து வருகிற அறிவியக்கத்தை புதுப்பட்டியில் நுழையக்கூடாது என்று தடுத்து விட முடியுமா? "சேவை செய்தாலே வாழலாம்.......!" என்ற கூக்குரல் ஊரெங்கும் எதிரொலித்தது. பசு போன்ற அடக்கமும், சிங்கம் போன்ற வீரமும், யானை போன்ற உழைப்பும் அந்த சிற்றூரின் வாலிப உலகை அணைத்துக் கொண்டு அழகு காட்டின. தொண்டு மலர்ந்தது. செயல் சிறந்தது. பயன் பெருத்தது.

ஏதோ செப்படி வித்தை செய்தது போல் கிராமத்தில் நாளுக்கு நாள் வசதி பெருகி வாழ்க்கை நலம் சிறப்படைந்தது. விவசாயம், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, கைத்தொழில், பொழுது போக்கு ஆக இப்படி எல்லாத் துறைகளிலும் முற்போக்கு. ஆண் பெண் அடங்கலும் வாலிபர் வயோதிகர் முழுக்கவும் சேர்ந்திணைந்து செயல் புரிந்தனர். சீலத்தின் சிறப்பு சித்திரையின் முழு நிலா வெனச் சோபிதம் தந்தது.

### வளரும் விஞ்ஞானம்!

லண்டன் ரேடியோ கோர்ட்டில் அமைக்கப்பட்டுள்ள பொருட்காட்சியில் "டெலி விஷன் டெலிபோன்" என்ற புதுமையான டெலிபோன் வைக்கப்பட்டுள்ளது. நெம்பரை திருப்பி பேச ஆரம்பித்தவுடன் திரையில் பேசுவோர் இருதரப்பாரையும் நேருக்கு நேர் காண முடிகிறது!

தமிழ்த்தென்றல்



"சேவா மன்றம்" கண்டு ஓராண்டு முடிந்து விட்டது. வானத்தில்தோன்றும் மின்னலைப்போன்று அவன் எதையும் செய்து விடவில்லை. ஊடலில் பிணங்கி முன்னேறும் பெண்ணைப் போன்று எல்லோரையும் அரவணைத்தே காரியத்தில் வெற்றி கண்டான்.

அவன் உண்டியைக் கருதவில்லை. உறக்கத்தைக் கருதவில்லை. உற்சாகத்தைக் கருதினான். உழைப்பைக் கருதினான். நாள் முழுக்க பாடுபட்டான். பயன் பெற்றான்.

### "பாலைவனத்தில் பசும்பால் கிடைக்குமா?"

எல்லா வகைகளிலும் தன்னைப் பின்பற்றும் கிராமம் இதில் தன்னை ஆதரிக்கும் என்றே முழு முழுக்க நம்பினான். ஆசைப்பட்டான். அப்பாவும் இணைவார் என்றே இருந்தான்.

"இது என்னடா நாடகக் கொட்டகையா? "ட்ராமாவில்" பேசுவது போல் அல்லவா பேசுகிறாய்? விதவையைக் கட்டிக் கொள்ளப் போகிறானாம்! என்ன அநியாயமடா இது. நான் எப்படியடா தலையை வெளியில் காட்டுவது? கண்ட கண்ட இடத்தில் எல்லாம் சொல்லாமல் என்னிடமே வந்தாயே!" அப்பாவின் ஆத்திரத்தின் அதிர்வெடி இப்படி இருந்தது.

இனி அவன் என்ன செய்வது? அவனுடைய மனதில் எத்தனையோ எண்ணங்கள் புதை வானம் மாதிரி பொங்கிப் பறந்தன. எகிறி குதித்தன. அவைகளில் தான் எத்தனை வர்ணங்கள்! ஆனால் அத்தனை அழகிலும் வெம்மை அல்லவா கலந்திருக்கின்றது!

என்னமோ ஏதோ வென்று செய்து விடக்கூடிய காரியமா இது? அவன் என்ன தீக்குழியில் குதித்து விட்டானா? இல்லை அவனது சிந்தனைக் கப்பல் திசைமாறி புயல் வெளியில் சிக்கி விட்டதா?

— தமிழ்த்தென்றல்

### தெரிந்து கொள்வார்கள்!

சிறுவன் வேகமாக ஏதேதோ கிறுக்கிக் கொண்டிருந்தான் ஒரு காகிதத்தில். அவன் தாயார் "என்னடா செய்கிறாய்?" என்றாள்.

"கடவுளின் படம் போடுகிறேன்" என்றான் பையன். "இதுவரை யாருமே கடவுளைப் பார்த்ததே கிடையாதே. அவர் எப்படி இருப்பாரென்று கூடத் தெரியாதே. நீ எப்படியடா போடுவாய்?" தாயார் இப்படிக் கேட்டாள்.

"......ம்......நான் போட்டு [illegible] கொள்வார் [illegible]

என்ன தான், உருப்படியாக— உண்மையாக — சேவை செய்தாலும் இந்தச் சமூகம் இப்படித் தான் இருக்குமா? பழமையை மாற்ற — மனதைத்தேற்ற — இந்த பெரியவர்களை எதிர் பார்ப்பதே நியாயமில்லையா? 'சட்டம்' என்றால் மட்டும் வாய் மூடி மௌனியாகி விடுகின்றனரே. "பாலைவனத்தின் நடுவே நின்று கொண்டு இங்கே அரைவிசம்படி பசும் பால் கிடைக்காதா?" என்று ஏங்கிய பைத்தியமாகத் தான் இவன் கதை முடிந்து விட்டதா?

பெற்றவரை வெறுத்து விட்டு, அவரைப் பிரிந்து ஊரில் கட்சி பிரதி கட்சி கட்ட அவன் தயாராகவில்லை.

"மனம் மாறிய பெரியவருக்காக......"

ஆகவே அன்றிரவே பார்வதியுடன் சென்னைக்குப் புறப்பட நிர்மானித்தான். சேவை செய்ய சிற்றூரில் இவ்வளவு வசதி கிடைக்கிற போது, சென்னையில் — அதுவும் 'தங்கள் பெயர் புகழ் வெளி வந்தால் போதும், அதற்காக எவ்வளவு வேண்டுமானாலும் நன் கொடை என்று......" என்று பெருமான்கள் பலர் காத்துக் கிடக்கிற நகரில் — இவனுக்கு வளப்பம் கிடைக்காமல் போகுமா?

ஐப்பசி மாதம்; சாரல் சிறிதாகவே இருந்தது; இரவே பெரியகுளம் போய் விட்டால், அதிகாலை பஸ்ஸில் மதுரைக்கு கிளம்பலாம் அல்லவா?

ஆற்றங்கரை வருவதற்குள் மழை பலத்து விட்டது. முழங்கால் அளவுதானே என்று ஆற்றைக் கடக்க இறங்கி விட்டனர். புதுவெள்ளம் திடீரென வந்து இடுப்புக்கு மேல் ஓடவே, பாண்டியும் பார்வதியும் மண்மேட்டை அடைந்தனர்.

கொட்டும் மழையில் அவர்கள் நனைந்த கோரம். நீர் மட்டமோ குறையவில்லை. மழையும் விடவில்லை. உதவி வர வசதியுமில்லை. குருட்டாம் போக்கில் குதித்து விடவும் அவன் விரும்பவில்லை. பார்வதிக்கோ நீந்தத் தெரியாது. நீந்தத் தெரிந்த அவனால் கூட அந்த இழவையை சரிக்கட்டித் தப்பிக் கரை காண முடியுமா?

பொழுது விடிந்ததும், வெள்ளப் பெருக்கில் மண்மேட்டின் கரையோரங்கள் கரைந்து போனதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன. இதற்குள் ஆற்றுவழிப் பக்கம் வந்த சிறுவர்கள் இதைப் பார்த்து விட்டனர். கிராமமே "குய்யோ முறையோ" என்றாகி விட்டது. கரைவெளி எங்கும் கூட்டம் சொல்லி முடியாது.

> **தேன் துளி:**
>
> "தன் முதுகும் முகமும் தெரியாமல் இருப்பது இயல்பு தான். ஆனால் எடுத்துக் காட்டுகிற நண்பன் மீது எரிந்து விழாமல் இருக்கிறவனே வாழ்வை அறிந்தவன், வாழத் தெரிந்தவன்"
>
> — "டிக்ரன்"

— தமிழ்த்தென்றல்



பண்ணையார் கரையில் நின்று கதறினார். கைகளைப் பிசைந்தார். கால்கள் தரையில் பாவாமல் துடிதுடித்தார். மேட்டில் இன்னும் கரையாமல் இருப்பதோ சின்னஞ் சிறு பகுதி. அதுவும் சிறிதே நேரத்தில் முடிந்து விடலாம். வாலிபர்கள் மேட்டைச் சேர ஆற்றில் எதிர் நீச்சு போட்டனர்.

"ஆ! இனி அவர்கள் பிழைக்க மாட்டார்களா? அப்பா பாண்டி! நீயும் பார்வதியும் எப்படியும் தப்பி விடுங்கள். என் கையாலே உங்களுக்குக் கல்யாணம்..........." அவரும் வெள்ளத்தில் குதித்து விட்டாரே!

அவசரத்தில் — சந்தர்ப்பத்தில் — மனம் மாறிய பெரியவருக்காக குண்டாறு மனமிளகவில்லை. அதன் வேகம் அதற்குத் தெரியும். இவருக்காக அதன் வேகமும் சுழற்சியும், குறைந்து விடுமா என்ன?

மரணத்தில் பாண்டியையும் பார்வதியையும் ஆசித்த பண்ணையாரும் கரை சேரவில்லை.

வாலிபர்கள் முயற்சியோ இம் மூவரின் செயலற்ற உடல்களை கரை சேர்ப்பதில் தான் வெற்றி கண்டது.

"சமதாய ஏற்ற தாழ்வுகள் நொறுக்கப்பட்டு சமதர்மம் மலராத வரையில், காதல் புரிவது கூட அநிலை அரவணைப்பதாகவே முடியும்." என்ற சுயமரியாதை இயக்க சுடர் மணி "சிங்கார வேலரின்" தேன் துளிக்கும் புதுப்பட்டி வரலாற்றுக்கும் சரியான பொருத்தம் இருக்கிறதல்லவா?

## விஞ்ஞான புதுமை!

உலகிலுள்ள பாலைவனங்களை பசுமை கொட்டும் விளைநிலங்களாக மாற்றுவது எப்படி என்பது பற்றி நடைபெற்றுள்ள விஞ்ஞான ஆராய்ச்சியின் பலன்கள் அண்மையில் லண்டனில் நடைபெற்ற உலக நாடுகளின் நிபுணர்களால்விவாதிக்கப்பட்டன.

ஆங்கில நாட்டு கீடக ஆராய்ச்சியாளரும், வெட்டுக்கிளி எதிர்ப்பு நிலைய டைரக்டருமான டாக்டர். "பி.பி.உவரோவ்", பாலைவனப் பகுதிகளில் அனுபவம்மிக்க பிரிகேடியர் 'ஆர்.ஏ. பாக்ஹேலட்' பேராசிரியர் "எப்.டெபன்ஹாம்" டாக்டர் 'வீகோ பாய்கோ' பேராசிரியர் "சோட்டன்" ஆகிய நிபுணர்கள் தங்கள் தம் ஆராய்ச்சி உண்மைகளை விளக்கினர்.

விரைந்து வளரும் விஞ்ஞான புதுமைக்கு எல்லை கட்ட எவரால்ஆகும்!

— தமிழ்த்தென்றல்

# ஐயோ அழகே!

(பி. சி. அ. வரங்கநாயுடு)

"மாலை நிலா வரவேண்டும்
மந்த மாருதம் வீசிட வேண்டும்
இளம் சோடிக் குயில் இரண்டும்
இன்பமாகப் பாட வேண்டும்"

வானொலியிலிருந்து கிளம்பிய இந்தப் பாட்டு மாலை நேரத் தென்றலில் கலந்து, கரைந்து, தோட்டத்து ஒவ்வொரு பொருளிலும் மோதி மோதி மடிந்தது.

அருகம்புல் தரையில் உட்கார்ந்திருந்த மங்களாவின் காதிலும் அது மோதியது.

"மாலை நிலா வர வேண்டும்."
"மாலை நிலா வரும்
மந்த மாருதம் வீசுகிறது.
இளம் சோடிக் குயில் இரண்டும்
இன்பமாகப் பாடும் ஆம்.
இதெல்லாம்..............."

அது எப்பேர்ப்பட்ட பெருமூச்சு தெரியுமா? உள்ளத்து நெருப்பின் வெம்மையை வெளியேற்றுவது போன்ற பெருமூச்சு. இன்ப எண்ணங்களைக் கனவுகளை, ஈடேற்ற முடியாமல் ஆர்வத்துடன் எழுதிக் குவித்த எழுத்தாளன் அதை மக்கள் முன் வைக்க வழிகாணாது நெருப்பிலே தூக்கி எறிவது போன்று, கனவுகளையும், இன்ப நினைவுகளையும் மனம் எனும் சுடுகாட்டில் இட்டு ஜெகச் சோதியாக எரிய விட்ட கோர நெருப்பிலின்றும் வெளியேறும் பெரு மூச்சு. ஆம்.

மாலை நிலா வரும். தோட்டத்து மலர்களைத் தொட்டணைத்து தென்றல் வரும். சோடிக் குயில் கூவும். பாடும். அது மட்டுமா? காலையின்ப நேரத்திலே இச்சிறும் பறவைகள் வான வெளியிலே பறக்கும். அப்போது மனிதன் எழுந்து சுறுசுறுப்பாக நடமாடுவான். இது மட்டுமா? இன்றும் எவ்வளவோ நடக்கும். ஆனால் மங்களாவுக்கு என்ன?

"மாலை நிலா வரவேண்டும்"

வானொலி பாட்டின் கடைசி அடியைத் திருப்பிப் பாடிக் கொண்டிருந்தது.

"காந்தா!" மங்களாவின் குரல் ஏக்கத்தின் மடியில் பிறந்து, ஏமாற்றத்திலிடை வளர்ந்து வெறுப்பின் சின்னமாக வெளியேறியது.

காந்தா ஓடோடி வந்து மங்களாவின் முன் நின்றாள்.

"கூப்பிட்டீர்களா?"

"ஆம்! அந்த ரேடியோவை..."

"நிறுத்தி விடுகிறேன்"

ஆனால் காந்தா தோட்டத்தைத் தாண்டி, வீட்டில் நுழைந்து மாடி போய் வானொலியை நிறுத்துமுன்...
...............

— தமிழ்த்தென்றல்



"பூச் சென்டு நீ! பொன் வண்டு நான்!"

இது அடுத்த பாட்டு. ஆனால் காந்தா பூராப் பாட்டையும் பாட விடவில்லை, கடுகடுத்த மங்களாவின் முகம், வளர்ந்து விட்ட முழுப்பிறை போல் காட்சியளித்தது. முழுப் பிறை கூட வானத்தில் பவனி வர ஆரம்பித்து விட்டது. அந்தக் காட்சி எவ்வளவு அற்புதமாக இருந்தது தெரியுமா?

காலையில் வந்த செம்பரிதி, தண்மை மிகுந்த கடலில் மூழ்கி, தன் வெப்பத்தை யெல்லாம் குறைந்துக் கொண்டு, குளிரடைந்து, இன்ப நினைவுகளை நெஞ்சத்தே எழுப்பும் வண்ணம், ஒளிப்பிழம்பாக வந்து நின்றது. வானமாகிய தோட்டத்திலே பூத்துக் குலுங்கும் எண்ணிறந்த மலர் அரும்புகளுக்குமத்தியில்; ஒரே ஒரு பூப்போல விளங்கியது

ஆனால் மங்களா நிலவை ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை. பச்சைப் பட்டுப் போன்றிருந்த அருகம்புல் மெத்தையில் படுத்த வண்ணம் எதையோ தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அந்தக் காட்சி பிரபல சித்திரக்காரனின் கையிலின்றும் மட்டுமல்ல, படைப்பரசின் தலைமையிலின்றும் வெளிப்பட்ட அற்புதமான சித்திரம் போலிருந்தது. இதைக் காணும் இளைஞனும், என்றும் இளைஞனை கலைஞனும் ஆயிரம் கதைகள் சொல்வான். ஆனால் மங்களா அவிந்து கொண்டிருந்தாள், புகைந்து கொண்டிருந்தாள். ஏன்?

— தமிழ்த்தென்றல்

காந்தா மங்களாவை நோக்கி வந்து கொண்டிருந்தாள். ஆனால் மங்களா அசையவில்லை. கொஞ்ச நேரம் காந்தா கூடச் சிலை போல் நின்றாள். அவள் கூடப் பெரு மூச்சைக் கக்கி விட்டு,

"அம்மா! சாப்பிட வாருங்கள்"

மங்களாவின் இரத்தின அதரங்கள் அசையவே இல்லை. பேசாமல் எழுந்து நடந்தாள். என்ன நினைத்தாளோ அருகம்புல் ஒன்றைக் குனிந்து பிடுங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு அழுதாள்.

காந்தா கூட அழ ஆரம்பித்து விட்டாள்.

"அம்மா! வாருங்கள் போகலாம்." அழுகையினூடே அனுதாபத்தையும் அறிவித்த அந்த வார்த்தைகளில் தான் எத்தனை பரிவு, பாசம்,

வானத்தை அண்ணாந்து பார்த்த மங்களாவின் கையைப் பிடித்துக் கொண்டு காந்தா நடந்தாள். கொஞ்ச தூரம் அழுது கொண்டே நடந்தார்கள். பிறகு அழுகை நின்றது. ஆனால் பெருமூச்சும், கேவலும் நின்றபாடில்லை. வீட்டினுள் நுழைந்தார்கள். அவர்கள் முகம் மழை பெய்து ஓய்ந்த வானத்தைப் போல நிர்மலமாகி விட்டது.

"வணக்கம்"

குரல் வந்த திக்கைக் காந்தாவும், மங்களாவும் நோக்கினார்கள். அங்கே!

நாகரீகம் என்று நாம் கருதுகிறோமே, அது உட்கார்ந்திருந்தது.

பளபளப்பான ஆடைகளும், பகட்டான தோற்றமுமிருந்த ஓர் கட்டிளங்காளை உட்கார்ந்திருந்தான்.

உற்சாகமில்லாத குரலில் "வணக்கம்" தெரிவித்தாள் மங்களா!

"மங்களா எல்லாம் தெரிந்த நீயா........"

அவனுக்கெதிரே இருந்த நாற்காலியில் மங்களா உட்கார்ந்தாள். அவள் கண்களிலிருந்து நீர்த்திவலைகள் உருண்டோடின. கள்ளங்கபடமற்ற பச்சிளங்குழந்தை அழுவது போல அழுதாள்.

"மங்களா! ஒன்று சொல்கிறேன் கேள்."

"நான் யாரையும் நம்பும் நிலையில் இல்லை. இந்த உலகமெல்லாம் ஒன்று கூடி எனக்குத் துரோகம் செய்து விட்டது."

"தப்பு. அது என் இல்லை. நான் .........மங்களா.........நான்......... கூடவா?"

அவன் குரல் வந்த திக்கை நோக்கினாள்.

அழுதாள். சாதாரண அழுகையல்ல. வேதனையாலும், நிராசையாலும் வெடித்த இதயத்தினின்றும் பீறிடும் இரத்த வெள்ளம் போல, கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளமாகப் பாய்ந்தோடியது.

அவன் எழுந்து வந்து அவள் கண்களைத் துடைத்தான். காந்தா வெளியேறி விட்டாள். அவன் மங்களாவின் தலையைக் கோதி விட்டான். ஆனால் அந்தப் பரிவு கூட அவள் சோகப் புயலை அடக்கமுடியவில்லை.

அதே நிலை வெகு நேரம் நீடித்தது. சாக்காட்டு அமைதி அங்கே நிலவியது. உலகமெல்லாம் செத்து விட்டது போன்று தோன்றியது. ஆனால் இடையிடையே மங்களா கேவிய ஒலி பயங்கர சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

"மங்களா!"

"என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். என்னைத் தனியாக இருக்க விடுங்கள்."

"மங்களா! எப்பேர்ப்பட்ட கொடிய கால மாறுதலும் நம்மைப் பார்க்க முடியாதென்றுயோ!"

"ஆம்! உண்மைதான். ஆனால் நான் தனியாக — அமைதியாக இருக்க விரும்புகிறேன்."

— தமிழ்த்தென்றல்

**திரை உலகின் திடுக்கிடும்செய்தி!**

வளைந்த திரை. சாதாரண சினிமா திரையைவிட ஆறுமடங்கு பெரிது. மூன்று திக்குகளிலிருந்து மூன்று புரொஜக்டர்கள் படத்தை — ஒரே படத்தை — காட்டும். ஆனால் தியேட்டரின் பல பகுதிகளிலிருந்தும் ஒரே ஒலி எழும். பெயர் "சினிரமா." இதை பார்ப்பவர்கள் தாங்களும் சேர்ந்து நடிப்பதாக உணர்கிறார்கள்.

"திரை உலகில் இது மகத்தான புரட்சி. இது ஒரு அற்புதம் மனித வர்க்கத்திற்கு" என்று "நியூயார்க் டைம்ஸ்" எழுதுகிறது; "ஹாலிவுட்டின் வெற்றி" என்ற தலைப்பின்கீழ்.



இரண்டு கைகளாலும் அவள் முகத்தைத் தாங்கிப் பிடித்து, "மங்களா! இந்தப் "பனிமயம்" உன்னை மறந்து விடுவான் என்று மட்டும் நினைத்து விடாதே. தேயாத நிலா போன்ற உன் முகத்தை என்னால் மறக்க முடியாது" என்று உணர்ச்சிப் பெருக்கில் பேசினான்.

ஆனால் அழுகையை நிறுத்தியிருந்த மங்களா அழுதாள். மௌனமாக பனிமயம் வெளியேறி விட்டான். சூனியம் நிறைந்த அந்தப் பிரமாண்டமான மாளிகையில் ஒரே ஒரு ஜீவன்—மங்களா — இன்னும் அழுது கொண்டிருந்தாள்.

X X X

"ஒளி படைத்த கண்ணினாய் வாவா!
உறுதிகொண்ட நெஞ்சினாய் வாவா!"

காலை நேரத்திலே அந்த இசை வானொலியில் இருந்து வந்து கொண்டிருந்தது. இசை வாணியின் அந்தக் குரல், சோர்ந்த உள்ளங்களைத்தட்டியெழுப்புவது போல இருந்தது. மங்களா கட்டிலில் சாய்ந்த வண்ணம் அந்தப் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தாள். பக்கத்திலுள்ள ஸ்டவ்வில் காந்தா வைத்துப் போன காபி ஆவியை விட்டுத் தன்னைக் குளிரடையச் செய்து கொண்டிருந்தது.

உள்ளே நுழைந்த காந்தா காபியை எடுத்துக் கையில் தந்தாள். அதைச் சுவைத்துக் கொண்டே வானொலி இசையை ரசித்த

— தமிழ்த்தென்றல்

வண்ணமிருந்தாள். காபி குடித்து முடித்தவுடன்,

"காந்தா டாக்டர் இன்று வருவதாகச் சொன்னாரல்லவா?"

"ஆம் அம்மா!"

"என்ன சொல்கிறார்?"

"குணமாக்கிவிடலாமாம் அம்மா! ஆனால் அம்மா நீங்கள் இப்படி அழுவது ரொம்பத் தவறு. பனிமயம் கூட அதைச் சொல்லச் சொன்னார்."

மங்களா பதில் பேசவேஇல்லை.

யாரோ படியேறும் சப்தம் கேட்டது.

மங்களாவின் அறையில் பனிமயம் நுழைந்தான்.

"மங்களா."

மங்களா ஒன்றும் பேசவில்லை. பனிமயம் அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"மங்களா! உன் மனதிலே நடக்கும் போராட்டங்கள் எனக்குத் தெரியும். உன் எண்ணக் குவியல்களைத் தரைமட்டமாக்கிய இயற்கை செய்த கொடுமைகளை நான் அறிவேன். அதுமட்டுமல்ல. உன் தன்னம்பிக்கையையே நீ இழந்து விட்டாய். உனக்கென்ன குறை? நான் இருக்கிறேன். என்னை நம்ப மனமில்லையா? நான் யார்? நிராசைப் பள்ளத்தில் உன்னைத் தள்ளிய உலகத்திடமிருந்து உன்னைக் காப்பாற்றியவன். உனக்காக அபவாதமேற்றவன். உனக்கு இசையும், நடன

ழும் கற்றுத் தந்து, சோர்வடைந்த உள்ளங்களுக்குச் சோபை யூட்டும் கடிகையாக்கியவன். உனக்காகவே வாழ்பவன். என்னை நம்ப மறுக்கிறாயா? நான் உனக்கு என்ன துரோகம் செய்தேன்? இதெல்லாம் உன் நாடகக்காதலன் ஒப்புவிக்கும் வசனங்கள் என்று எண்ணி விடாதே! நீ அநாவசியமாக வெந்து கருகுவதை நான் சகிக்கமுடியாது.''

இவ்வளவையும் மௌனமாகக் கேட்ட மங்களா எழுந்தாள். அவள் கையைப் பிடித்த வண்ணம் காந்தா அவளை அலமாரிப் பக்கம் அழைத்துப் போனாள். காந்தா ஒரு புத்தகத்தை உருவி அவள் கையில் கொடுத்தாள்.

சிலைபோலிருந்த பனிமயத்திடம் வந்து அந்தப் புத்தகத்தை நீட்டி மங்களா சொன்னாள்:

"இதோ என் உயில்! என்வாழ்நாள்எல்லாம் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்காக நீங்கள் எத்தனையோ உபகாரங்கள் செய்திருக்கிறீர்கள். இந்த உயிலைப் படித்து என் கடைசிக்கோரிக்கையையும் நிறைவேற்றி விடுங்கள். நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையும் உண்டு."

அதைக்கையில் வாங்கிப் புரட்டினான். அந்தச்சிறிய புத்தகத்தில் ஒரே பக்கத்தில் காந்தாவின் கையெழுத்தில் அவள் சொன்ன "உயில்" இருந்தது. கீழே மங்களா கையெழுத்திட்டிருந்தாள்.

"என் கருத்துக்கள் தவறுதலாக இருக்கவும் கூடும். ஆனாலும் கூறுகிறேன். எங்கோ பிறந்த நான், என் பூர்வீகம் அறியேன். உலகம் என்னை நிராசைப்படுகுழியில் தள்ளியது. அப்பொழுது ஒருவருமே ஏறெடுத்தும் பார்க்காத என்னை ஒரே ஒருமனிதர் என்னை எடுத்து ஆளாக்கினார். அந்த மனிதரின் உதவியை நானல்ல, உலகமே மறக்காது. ஆனால் அவர் என்மீதுகாட்டிய பரிவு என் அழகின் மீதுதான் என்று கருதுகிறேன். பெரும்பாலான அனாதைகள், அருவருப்பும், ஆபாசமும் நிறைந்தவர்களாக இருக்க, நான் மட்டும் அழகாக இருந்தேன். அந்த ஒரு முதல்தான் என்னைச் சுகமாக வாழவைத்தது. என்கடந்த கால வாழ்வையும், என்னையொத்தப்பலர் நடுத் தெருவில் வாழ்வதையும் மறக்க வைத்தது. ஆடம்பரவாழ்வில் நான் மறந்தவை பல. ஏன் உலகையே எனதாக்கி அழகு பார்த்த நான் உலகமக்களையும், சுற்றுச்சார்பையும் மறந்திருக்கிறேன். நிலவைக் கண்டு என் முகத்திற்கொப்பிட்ட என்னை—தென்றலை அநுபவித்து அதை என் குரலுக்கு ஒப்பிட்ட என்னை—அருவியை, ஆற்றைக் காணாதவர்பலிருக்க, அங்கே ஆடிப் பாடி விளையாடிய என்னை—இயற்கை திடீரென்று குருடியாக்கி விட்டது. ஒளிநிரம்பிய இன்பமயமான என் வாழ்வை இருளடையச் செய்து விட்டது. ஆனால் என் அழகை மட்டும் அழிக்கவில்லை. அழிக்க முடியவில்லை. அதனால்தான் நான்

— தமிழ்த்தென்றல்




குருடியான பின்னும் போற்றப்படுகிறேன்.

பலரின் அனுதாபத்துக்குரியவளாக இருக்கிறேன். ஏன்? என் அழகுதான். என்ன விசித்திரம். எத்தனையோ பெண்கள் அனாதைகளாகத் திரிகிறார்கள். ஆனால் நான் மட்டும் அரசியாக்கப்பட்டுவிட்டேன். ஏன்? என் அழகுதான். இந்த அழகிற்குப் பணத்தைவிடச் செல்வாக்கு இருக்கிறது. இதே அழகால்தானே ரோமவீரன் அந்தோனியைத் தன் பாதத்தில் கிடக்கவைத்தாள் கிளியோபாத்ரா! இந்த உலகம் குணத்திற்கு மதிப்புத் தருவதைவிட அழகிற்கல்லவா அதிக மதிப்புத்தருகிறது. இது கொடுமை.

இந்தக் கொடுமை ஒழிய என் சொத்துக்கள் அத்தனையும் பயன்படட்டும்."

வாசித்து முடிந்தவுடன் பனிமயம் நிமிர்ந்து பார்த்தார். மங்களாவைக்காணவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தார்.

பட்டுமெத்தை பொருத்திய, அழகாகச் செதுக்கப்பட்ட கட்டிலிலே மங்களா மீளாநித்திரை செய்து கொண்டிருந்தாள்.




அடுத்த இதழில்
"தியாகி நெ. 3." தொடரும்.

— தமிழ்த்தென்றல்

# ஒரே நடிப்பு!

மணி:

மாணவப் பருவம் மகிழ்ச்சி உருவம். துன்பம் ஏதும் காணாத சுடர் வீசும் மடலிர். வாழ்க்கையின் முழு அமைப்பையும் — அதன் கோணங்களையும் — சித்திரம் அமைக்கும் கலையின் நிலையம்.

வீட்டிலுள்ள வேதனை — பெற்றோர்கள் படும் உபாதை — வாழ்வில் அடைய வேண்டிய சாதனை இத்தனையும் உணர்ந்தாலும் சரி, உணராவிட்டாலும் சரி பள்ளியின் எல்லையில் நுழைந்தவுடனே தொல்லையை மறக்கடிக்கும் மாபெரும் நேரமே மாணவப் பருவத்திற்கு உண்டல்லவா? இது அதற்கு ஏற்றம். ஏன் எக்காலமும் கூட:

மானிட வாழ்க்கையின் மேடு பள்ளங்களை இருபெரும் வர்க்கங்களாகப் பிரித்து வைத்துக் கொண்டு வானதிர கூக்குரல் போடுகிறார்களே, இந்த முதலாளி — தொழிலாளி என்ற வேறுபாட்டில், இதில் நான் தொழிலாளி வர்க்கத்து உறுப்பினன். அதுவும் உழைத்து வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி வறுமையில் வளர்ந்து வாழும் ஆயிரமாயிரம் குடும்பங்களில் நான் பிறந்த குடும்பமும் ஒன்று.

தந்தையை இழந்தவன். தாயின் அயராத உழைப்பினால் வளர்க்கப்பட்டவன். பஞ்சைகளின் பிரதிநிதி. வீடு வீடாகச் சென்று சென்று, — விலா நோக நீர்க்குடங்கள் சுமந்து சுமந்து — பாத்திரங்கள் தேய்த்து தேய்த்து — சமையற் கட்டில் கண்களைக் கருக்கிக் கருக்கி — பொன்னான உடலை புண்ணாக்கி அல்லும் பகலும் அனவரதமும் பாடு செய்து என்னைப் படிக்க வைத்து இன்று கல்லூரி மாணவனாக்கியிருக்கிறாள், எனது அருமை 'அம்மா.'

தாய்மை மலிந்த வரலாற்றின் தாய்மை உலகம். என்னை ஆளாக்க — நடமாடும் ஜீவனாக்க — அவள் அனுபவித்த இடர்கள் எண்ணிலடங்கா! துன்பங்களோடு ஒன்றி உறவாடி, நான் பெற்ற செல்வத்தை பேணிப் பாதுகாப்பதில் தன்னிகரற்றவள் தாய். தனிப் பெருமை கொண்டவளும் அவளே.

வறுமையின் எடுப்பான செல்லப் பிள்ளையாக வளர்ந்து விட்ட எனக்கு, வாழ்வில் வெறுப்போ, கசப்போயின்றி ஓரளவு என்னை

**விருதை ந. இராமசாமி**

— தமிழ்த்தென்றல்



உற்சாக மூட்டி வருவது எனது மாணவப் பிராயமேயாகும். நண்பர்களின் சேர்க்கை — ஒய்வு நேர உரையாடல் — கல்லூரிக்கே உரித்தான உல்லாசப் பொழுது போக்கு — அகில உலக ஆய்வுரைகள் — இப்படி இவைகள் எல்லாவற்றையும் விட, எனக்கு எழுச்சியூட்டி இன்பப் பொய்கையில் உலகை மறந்து மிதக்க வைத்தது லீலாவின் நிர்மலமான நிலா முகமே. பயங்கரக் கோடையில் பாதங்கள் நோக நடந்து களைப்புற்ற வழிநடை பிரயாணியின் கண்களில் தென்பட்ட மோர் பந்தல்... ...........! வரட்சியைத் தவிர வேறு வளப்பமே அறியாத இராமநாதபுரம் மாவட்டத்தில் பெய்த பருவ மழை..... ...........!

விண் மீன்கள் விளையாடும் விரிந்த வானிலே மோகனமாய்த்தவழும் முழுமதிலா. சுதிகலையாத இசைக் குரல் [illegible]ந்து வைக்கும் அடி ஒவ்வொன்றிலும் நாட்டியக் கலைக்கு இலக்கணம் கற்பிக்கும் நடை. ஒல்லியும் உடைசலும் இல்லாத பருமனற்ற உடலமைப்பு. காண்பவர் கருத்தில் குபீரெனப் பாயும் கூர்மையான அம்பை யொத்த அலங்காரக் கண் வீச்சு. இது நாள் வரை எடுத்து மீட்டாத வீணை மூலையிலே எத்தனை நாட்கள் சும்மா கிடப்பது ...............?

படை எடுத்த வீரர்களுக்குள் நானும் ஒருவன். முயற்சி திருவினையாக்குமோ அல்லது திருகுவலியாக்குமோ நான் அறியேன். ஆயினும் அடுத்தடுத்து முயன்றேன். தொகுத்துக் கடிதங்கள் பல தீட்டினேன். கொடுத்து வாங்கினேன் புத்தகங்களை. முடிவு.................?

துரை எனக்குத் தோழன். நட்பின் கனி மிகுந்த துணைவன். "கருணையின் கடல், காருண்ய வள்ளல்" என்று கூறினால், இவைகள் மிகைப்பட்டவைகள் அல்ல அவனைப்பற்றி. எனது பயங்கர வாழ்வுப் போராட்டத்தில் அவனும் பங்கு கொண்டு உறுதுணை தந்தான். எனது தளர்ச்சியைப் போக்கி எழுச்சியை அளிக்கும் குளிர்ச்சி மிக்க கூல் டிரிங்க் அவன்! எனக்கு உதவிகள் செய்ய ஒருபோதும் அவன் ஒதுங்கி நிற்க வில்லை. இன்று வரை நானும் எனது தாயும் ஓரளவு உலகப்பற்றுடன் வாழ்கிறோம் என்றால் அதற்கு அடிப்படை, ஆதிகாரணம் நண்பன் துரை பாய்ச்சிய நம்பிக்கை யூட்டமேயாகும்.

அப்படிப்பட்ட ஆருயிர் நண்பன் துரைக்கும் லீலா மீது நோக்கம் என்கிற போது, ஏக்கமும் துக்கமும் இளைக்க வைத்தன என்னை. ஏதுமறியாது விழித்தேன். காதலுக்கும் நட்பிற்குமிடையே.......... ...........? நடக்கவிருக்கும் போரில் நிகழப் போகும் வெற்றி தோல்வியின் விளைவு என்னை எங்கே கொண்டு போய்த் தள்ளி விடுமோ...........? இடர்களை எதிர் நோக்கும் இக்கட்டான வேளை. அறிவு திணறும் சமயம். காதலுக்கும் நட்பிற்கும் கடும்போட்டி நடைபெறும் நேரம்.

— தமிழ்த்தென்றல்

ஆமாம்! தானத்திலே சிறந்தது நிதானம் அல்லவா?

லீலா:

ஆமாம்! தானத்திலே சிறந்தது நிதானம் அல்லவா? காதல் உள்ளம் மலரினும் — மணம் மிக்க பசு வெண்ணெயினும் — மெல்லிய தன்மை உடையது தான் ஆனாலும், கட்டுப்பாடும் கடின சித்தமும் அதற்கும் இல்லாமற் போகாது அல்லவா! அதன் புனிதத் தன்மையை அதிகாரம் — அந்தஸ்து — ஆணவம் — வெளிப்பகட்டு ஆகிய இவைகள் எடுத்து விட இயலாது.

தென்றலை விரும்பும் தென்னை வன் வாடைக்காற்றுக்கு "வருக" என்று வரவேற்பா அளிப்பான்? அதுபோல களிமிக்க காதலுக்கு கருத்தில் இடமளித்துவிட்ட நான்...? என்னோடு கல்லூரியில் படித்த மாணவர்கள் பலர். ஆனால் இருவர் மட்டுமே எனது நினைவுப்படலத்தில் நீங்கா நிலை பெற்றனர். மணி எனது இதயத்தின் மருட்பாடு ஆனான். உடலின் அணுவனைத்தும் அவரது பெயரையே உச்சரித்தது. உவகை கொண்டது.

கண்ணெதிரில்படும் பொருள்கள் எத்தனையோ இருக்கலாம். ஆனால் கருத்துக்கு பிடித்தமானது ஒன்றே ஒன்றாக இருக்கத்தான் இருக்கும். அதன் மீது நம் முழுக்கவனமும் செல்வதில்லையா?

காதலிடமெங்கும் மணியின் கட்டழகு சொரியும் தோற்றம் கண்டேன். திரும்பும் திசையெல்லாம் ........."ம்"........."காதல்" பண் இசைக்கப்படுவதாக உணர்ந்தேன்.

குரலையும் குயிலையும் — தோகையையும் வண்ணமயிலையும் — இமயத்தையும் எழில் மிகு பனியையும் பிரிக்க முடியுமா? பிரிப்பதுதான் முறையா? நானும் மணியும் பிரிக்கமுடியாத பண்பினோர். அவரது வாழ்க்கைப் பேரேட்டில் சிற்றேடாக இணைத்து விட்டேன். அவர்கள் இருவரும் நண்பர்கள்தான். இதற்காக என்னை "காதலி" என்று பந்தபோட நினைப்பது ஆகுமா?

மணி பராரிதான். அன்னக் காவடிகளின் முன்னேற்றத் தலைவன் தான். தரித்திரவாசிகளின் தத்து புத்திரன் தான். ஆனாலும்......என் இதயம் அவரது நினைப்பில்.........!

துரை பணக்காரர்தான். பங்களாவாசிதான். பாலும் பழமும் பூக்கள் சொரிந்த பஞ்சணையும் பக்கம்கொண்ட பாக்கியபுரியின் முடிசூடா இளவல் தான். என்றும் அவரது பார்வையில்........... பேச்சில் ...... நடத்தையில் .........!

மணியும் துரையும் நெருங்கிய நண்பர்கள். தனது சின்னஞ்சிறு சுயதேவையைப்பூர்த்தியைக்கூட துரையிடம்தான் எதிர்பார்க்கிறார் மணி. எனக்குக்கூட ஏதேனும் தேவைப்பட்டு அவரிடம் கேட்கும்போது, துரையிடமே கேட்டு வாங்கித் தருகிறார். அந்த வகையில் அவர்கள் அன்பு உன்னதமானதே. இதற்காக என்னை வந்து.......!

— தமிழ்த்தென்றல்



ஏற்பட்ட இடர் எல்லாம் இதனால்தான் என்பதை நான் ஆதி முதலே அறிந்திருந்தேன். துரையின் பார்வையில்–பேச்சில் –நடத்தையில் தெம்பும் நம்பிக்கையும் இருப்பதற்கும் காரணமும் இதுவேதான்.

என்ன சிநேகம் என்றாலும், துரை வந்து பணக்கார வீட்டு பையன் ஆனாலும், மணிக்கு ஏதோ அப்படி இப்படி என்று சிறுசிறு உதவிகள் செய்யலாமே ஒழிய படிப்பு செலவு பூராவையும் தானே தரமுடியுமா? ஆக மணிக்கு இண்டருடன் படிப்பு முடிந்து "வெஸ்ட் என்ட் கம்பெனியில்" கிளார்க்காக வேலைக்கு சேர்ந்துவிட்டார்.

மணி இல்லாத கல்லூரிப்படிப்பு எனக்கு பெரிய மலைப்பாக இருந்தது. அப்பா ரிடையர்டு உபாத்தியார் தான் என்கிறபொழுது என் படிப்பிற்கு "செக் செக்காக" எழுதி தள்ளிக்கொண்டாயிருப்பார்! படிப்பை சடக்கென்று நிறுத்தினால் தான் சரியான சமயத்தில் மணியுடன் வாழ்க்கையில் சேர முடியும் என்று நான் முடிவுசெய்தேன். அவ்வாறே நடந்தேன்.

எனது ஆவலை அப்பாவும் தடுக்கவில்லை. படிப்பு இருக்கிறது. அழகு இருக்கிறது. தொழில் இருக்கிறது. மனஒற்றுமையும் இருக்கிறது. யாவரும் எங்கள் திருமண விழாவை வரவேற்றனர். வந்திருந்தனர். ஆசியும் தந்தனர்.

இந்த காலத்திலும் கூட துரை எங்கள் வீட்டிற்கு வளைய வளைய வந்து கொண்டிருந்தார். உதவிகள் செய்வதிலும் சுறுசுறுப்பு காட்டியே வந்தார். அதுதான் எனக்கு விளங்காவினையாக இருந்தது! ஏன் விந்தைமிகும் வேடிக்கையாகவும் இருந்தது! அவரும் "பி. ஏ." யை இதற்குள் முடித்துவிட்டு பெருமை மிக்க இடத்தில்...........

சரசு மாநிறம் என்றாலும் எடுப்பான உடலமைப்பு கொண்டவள். புன்னகை தவழும் அவளது முக பாவத்தில் எப்பொழுதும் இனிமை நிறைந்து மிதக்கும். துரையும் சரசும் எங்க வீட்டிற்கு அடிக்கொரு தரம் வருவார்கள். போவார்கள். நாங்களும் அப்படியே.

இப்படி குடும்பமாகி வாழ்வில் இன்பம் பெறுகிறபொழுது கூட துரை என்னை வெறிக்க வெறிக்க பார்ப்பதில் தவறுவதில்லை. இதற்கு காரணம் இன்னும் அவருக்கு என் மீது......இந்த ஆண்களின் சபலப் புத்தி இப்படித்தான்........?

இனி தாமதிக்கக்கூடாது. எப்படியும் ஒரு முடிவு கட்டி தீரவேண்டும் என்று விரும்பினேன்.

— தமிழ்த்தென்றல்

துரை:

இனி தாமதிக்கக்கூடாது. எப்படியும் ஒரு முடிவு கட்டி தீரவேண்டும் என்று விரும்பினேன்.

பால்யத்திலிருந்து இன்றுவரை இந்த மணிக்கு செய்த உதவிகளுக்கு கணக்கு வழக்கேது? அவனை பொறுத்தவரை அன்பின் அருங்

கடல் அவனேதான். இதில் சந்தேகத்திற்கு இடமே கிடையாதுதான்.

இடக்கு பண்ணுவது எல்லாம் இந்த லீலாதான். எனக்காக உயிரை விடக்கூட மணி தயாராக இருக்கிறானே, இது அவளுக்கு தெரியாதா? ஏதோ ஆசைக்கு என்று ஒரு நாள்...........? இவளுக்கு இதனால் என்னதான் குறைந்து விடுமாம்!

அவனுக்கும் காசநோய் வந்து வேலையும் போய் இன்று முழு முழுக்க பஞ்சையாகி விட்டானே. வீட்டு செலவிற்கு கூட இந்தமாதம் நான் தானே கொடுத்தேன். நிலைமையும் மோசமாகி நேற்று முந்தா நாள் தான் அவனையும் "எர்ஸ்கின்" ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறது. இப்படி செலவு எல்லாம் காணாது என்று இன்று ஊசி மருந்துக்கென்று பணம் கேட்டாள்.

இதுதான் தருணம் என்று நானும் எனது ஆசையை சொல்லி விட்டேன். "கணவன் பிழைப்பது உன் கையில் தான்" என்று கூறி விட்டேன்.

"மணி ஆஸ்பத்திரியில். வீட்டில் நீ. என் மனதிலோ உன் ஆசைத் தீ. ஒரு முறை........நானோ "பேல் பேலாக" ஊசி மருந்துகளை தள்ளி விடுவேன். மணி பிழைப்பான். உனது தாலியும் தப்பும். இன்று இரவு ஒன்பது மணிக்கெல்லாம்" இது எனது "அல்டி மேட்டம்" காதல் முரசு கொட்டினேன். கண் கலங்கினாள். கதறினாள். ஏதேதோ நியாயங்களை பேசினாள். கெஞ்சினாள்.

"என் முடிவு இதுதான். நன்றியை காப்பாற்ற எனது ஆசையை அணைத்துக்கொள். சுகப்படுவாய்" என்றேன். அழுதாள். அதில் கூட நான் அழகை ருசித்தேன் அவளிடம்.

அம்மம்மா! எத்தனை வருடங்களாக நான் கட்டி காத்த ஆசை இன்று பூர்த்தி பெறப் போகிறது. அந்த மாதுளம் கன்னத்தை.........

மண்டியிலிருந்து இரவு ஏழு மணிக்கெல்லாம் என் வீட்டிற்குக் கிளம்பினேன். ஆமாம் நல்லபடி அலங்காரம் செய்து கொள்ள பெரிய ஆவல் இருந்தது. இது மிக மிக அவசியமல்லவா?

வீட்டிற்குள் நுழைந்தேன். முற்றத்தைத் தாண்டினேன். என் ரூமிற்குள் பேசும் குரலொலி.

"சரசு உனது தியாகத்தை நான் எப்படி மறப்பேன்? கல்லூரிக் காதல் மன்றும்........!"

"அது சரி சேகர்! உனது பார்வையும் பேச்சும் என் இந்த இன்பமும் எனக்கு என்றென்றும்..........!"

எனக்கு தலை சுழன்றது. சிந்தனை சுக்கு நூறாகியது. சரசுவிற்கு கள்ள காதலன். பழைய கணக்கை சரிபார்க்கிறார்களா பாவிகள்!

கட்டுவதற்குள் திறந்து கொண்டது கதவு. ஆசைக் கோளாறில் — ஆத்திரப் புத்தியில்--கதவைக் கூட தாழ்ப்பாள் போடாமல்..........!

அன்னியன். ஆள் புதுசு. நூல் தடியை எடுத்துக் கொண்டு கிளம்பினேன். துரோகி சரசு இடைமறித்தாள்.

"அடி சண்டாளி..............!"

— தமிழ்த்தென்றல்



"நான் சண்டாளி என்றால் நீங்கள் முழு முழுக்க......ஆண்கள் மட்டும் எப்படியும் நடக்கலாம். கல்லூரிக் காதல் உங்களுக்கு மாறவில்லை. தூக்குக் கயிற்றை காட்டி லீலாவை பலி கேட்க உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் பெண் மட்டும்................அழகால் லீலா உங்களைக் கவர்ந்தாள் என்றால் இந்த எனது காதலன் அன்பால் என்னைக் கவர்ந்தான். இவன் யார் தெரியுமா?" பேசியவள் அழுது துடித்துக் கொண்டிருந்த அந்த அழகிய வாலிபனுடைய தலைப்பாகையை நீக்கினாள்..........ஆ! லீலா.

புத்திகெட்டு நின்றவனைத் திருத்த............

நான்:

புத்திகெட்டு நின்றவனைத் திருத்த..............

கடிவாயில் வைத்து, வலை வீசினான். கிடைத்து விடும் என்றே மனப்பால் குடித்தான்.

கதியற்றவள் தன் இனத்தை நாடினாள். முறையிட்டாள். பெண்ணினம் வகுத்த திட்டம் வெற்றி கண்டது. ஒரே நடிப்பில் ஒரே நொடியில்—ஒரே பேச்சில் ஆணினம் தன் உணர்வுபெற்று நிலையைக் கண்டது. தலைவணங்கியது.

"படித்துப் படித்துச் சொன்னாலும் பட்டுப் பட்டுத் தெரிந்தாலும் ஆண்கள் நீதி நியாயங்களைப் பேணுவதில்லை. ஆனால் தங்கள் சிந்தையில் படும் எந்த சிறு நியாயத்தைப் பேணுவதிலும், ஆண்களை வழி நடத்துவதிலும். பெண்ணினத்திற்குத் தான் என்றைக்கும் பெருமை" என்ற "கர்ம வீரன் கரிபால்டி"யின் கனி மொழிக்கு சரியான. எடுத்துக் காட்டல்லவா இந்த "ஒரே நடிப்பு!"

ஸ்தாபிதம்: 1925.
திருநெல்வேலி
இம்பீரியல் ஸ்டுடியோவில்
எடுக்கப்படும்
போட்டோக்கள் மிகவும் சிறந்தவை.
அதற்குக் காரணம்?
26 வருட அனுபவமே!
உரிமையாளர்: T. V. S. ஹமீது,
கிளை ஆபீஸ்: விருதுநகர், தூத்துக்குடி.

— தமிழ்த்தென்றல்

(16-ம் பக்கம் தொடர்ச்சி.)

செய்யும் குறை மட்டும் எனக்குக் கிடையாது........"

"இருந்தால்தான் என்ன! நாரதர் கலகம் நன்மையிலேயே முடியும் என்று சொல்லுவார்களே! அதுபோல, நீங்கள் செய்கிற கலகமும் ........"

"நன்மையாக முடியுமோ! தீமையாக முடியுமோ! குண்டுணித்தனம் செய்து ஒருவர் சின்னட மற்றொருவருடன் முடிபோடும் மோசமான குணம் எங்கள் வீட்டு வேலைக்காரிக்குக்கூட கிடையாது, அண்ணா! நீங்கள் நிச்சயமாக நம்புங்கள்......"

"நான் உங்களைப்பற்றி எப்போதேனும் எதற்காகிலும் சந்தேகித்ததுண்டா? திடீரென உங்களுக்கு ஏன் இப்போது அந்த விசாரம் வந்தது?..........."

"சிவன் பேச்சிலிருந்துதொடங்கி இப்படி ஏதோ ஒரு திசைசாகப்பேச்சு வந்து முடிந்திருக்கிறது. அதுபோகட்டும். நாம் எதைப்பற்றி முதலில் பேச்சை ஆரம்பித்தோமோ அவ்விஷயத்துக்கு வருவோம்......"

சதானந்தம் பிள்ளை எதையோ நினைவு கூற முயல்பவர்போல, முகத்தில் சிந்தனை ரேகையைப் படரவிட்டு, 'எதைப்பற்றிப்பேசிக்கொண்டிருந்தோம்.....?' என்று கேட்டார்.

"இதற்குள் மறந்துவிட்டதா?" என்று வினவிய மாசிலாமணி முதலியார், "பாவம்! உங்களுக்கு எத்தனையோ வேலைகள். கவலைக்கோ கணக்கில்லை. இந்நிலையில் எந்த விஷயந்தான் உங்களுக்கு எப்படி ஞாபகமிருக்கும்? இந்த நிமிஷத்தில் நினைத்தது அடுத்த கணத்தில்......" என்று அளந்துகொண்டே போனார்.

"சரி, சரி; முதலியார்வாள்! நீங்கள் சொல்லவந்ததைச் சொல்லுங்கள்" என்று சதானந்தம்பிள்ளை இடைமறித்துக் கூறினார்.

மாசிலாமணி முதலியார், "சொல்லத்தானே போகிறேன்?" என்று கூறியவாறு மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேல் உத்தரீயத்தின் முனையால் துடைத்துப் போட்டுக்கொண்டு, "சிவன் வாசிக்கும் கல்லூரியில் நம்ம ஸோதுனன் மையனொருவனும் படிக்கிறான். சச்சிதானந்தம் என்பவனை உனக்குத் தெரியுமோ, சிவா?........."

சிவகுமாரன் வாயைத் திறக்கவேயில்லை.

மாசிலாமணி சுதாரித்துக்கொண்டு, "உனக்கு எப்படித் தெரியும்? அவன் பி்ஏ வகுப்பு. ஆயிரம் பேருக்குமேல் படிக்கும் கல்லூரியில் யாரை யார் தெரிந்துகொள்ள முடியும்? ஒரே வகுப்பில் படிப்பவர்களிலேயே எல்லோரையும் தெரிந்துகொள்ளமுடியாதே! அப்படியிருக்க ........" என்று இழுத்தார்.

சதானந்தம் பிள்ளைக்கு இவருடைய பேச்சின் போக்கு எரிப்பை வருவித்தது. ஆனாலும் அவர் அதை அடக்கிக் கொண்டார்.

மாசிலாமணி முதலியார் மீண்டும் ஆரம்பித்தார். "ஆனால், அண்ணா! நம்ம சிவனை, அந்தக் காலேஜிலுள்ள எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. அவனுடைய தீட்சணிய புத்தியையும் திறமையையும் புரொபஸர்களெல்லாம் கூடப் பாராட்டுகிறார்களாம்........"

— தமிழ்த்தென்றல்



சதானந்தம் பிள்ளை புன்முறுவலோடு என்ன முதலியார்வாள்! கதை சொல்கிறீர்களா? அல்லது... ........"

மாசிலாமணி, "என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? நான் சொல்வது உங்களுக்கு வேடிக்கையாகத் தான் இருக்கும். உங்கள் பிள்ளையைப் பற்றிச் சொல்கிறேனே இல்லையோ! எப்போதும் தங்கள் கையிலுள்ள சரக்கைப் பற்றி—அது விலைமதிப்பற்றதாக இருந்தாலும்—யாருக்கும் சரியான மதிப்புத் தெரியாது. பிறருக்குத்தான் அதன் தன்மை நன்கு தெரியும். சிவனைப் பற்றி நீங்கள் என்னமோ எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். உண்மையாகச் சொல்கிறேன். அவன் படிப்பிலே பிரகஸ்பதியையும் தோற்கடிக்கக் கூடியவன். சாதுரியத்திலே சாணக்கியனையும் விஞ்சியவன். அவன் காலத்திலே உங்களைவிடப் பன்மடங்கு பிரசித்தியாக இருப்பான். எதிர்காலத்திலே—அவன் ஜவஹர்லால் நேரு—இல்லை; ஜெயப்பிரகாஷ் நாராயணன்; அவர்கூடச் சரியில்லை; சுபாஷ்சந்திரபோஸைப் போல இணையற்று விளங்கி நம் நாட்டுக்குப் பெரும் புகழும் வாங்கித் தருவான்; தெரியுமா!........"

— தமிழ்த்தென்றல்

"போதும்; போதும். முதலியார்வாள்! போதும்......" என்று குறுக்கிட்டார் சதானந்தம்.

மங்கை இப்போதுதான் மூச்சைச் சரியாக விடலானாள், திலதவதி கீழே உட்கார்ந்து விட்டாள்.

தந்தையின் கடுமொழியை விட மாசிலாமணி முதலியாரின் புகழ்மொழி சிவகுமாரனை மிகவும் கதி கலக்கியது. 'அந்தமனிதன் எதற்காக இவ்வளவு பீடிகை போடுகிறானே' என்று அவன் அஞ்சினான்; ஆதலால் மெள்ள அவ்விடத்தை விட்டு நழுவிப்போக முயன்றான்.

இதைக் கண்டுவிட்ட மாசிலாமணி, "சிவா! எங்கே போகிறாய்? இரு அப்பா! உன்னிடம் சில வார்த்தை சொல்லவேணும் என்று கூறி அவனைத் தடுக்கலானார்.

சதானந்தம், "அவன் போகட்டும், முதலியார்வாள்! அப்புறம் பேசிக்கொள்ளலாம்........." என்று கூறி அவனைப் போகச் செய்தார். 'அவனை எதிரில்வைத்துக்கொண்டே அவனைப்பற்றி வானளாவப் புகழ்கிறாரே! இங்கிதந் தெரியாத மனுஷன்' என்று அவருக்கு உள்ளூர வருத்தமுண்டாயிற்று.

அவருடைய மனக் குறிப்பை யறியாத மாசிலாமணி முதலியார், "நான் கேள்விப்பட்டவரை சிவன் தன் வகுப்பிலே எல்லாவற்றிலுமே முதன்மையாக விளங்கிக்கொண்டிருந்தானாம். அவன் விசேஷ பாடமாக எடுத்துக் கொண்டுள்ள பூதபௌதிக சாஸ்திரத்தில் மேதாவிலாசத்துடன் இருந்தான் என்று சொல்லுகிறார்கள். அப்படியிருக்க, அவன் பரீட்சையில் பாஸாகவில்லை யென்றால், இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது. கடைசியில் காலேஜ் வெளிப்பட்டாலும் சரியாகத்தான் போயிருக்கட்டும்........."

(தொடரும்)

வளர்ந்து வரும் நாகரிக மோஸ்தர், வளப்பம் நிறை வேலைத்திறன்
நம்பிக்கை நாணயம் நிறைந்தது

**மலபார் டெயிலரிங் மார்ட்**

புரோப்: M. P. KARUNAKARAN, ரயில்வே பீடர் ரோடு, விருதுநகர்.

---

பருப்பு சல்லடை, கடலைப்பெட்டி சல்லடை, அவியல் டாங் சல்லடை
ரைஸ் அல்லர் சல்லடை முதலிய சல்லடை ரகங்களுக்கு

**ஸ்ரீ ராமகிருஷ்ணா அன் கோ**

தந்திமரத் (செ. மீ. பெண் பாடசாலை) தெரு, விருதுநகர்.

---

**பேபி காப்பி** ருசிகரமானது விருதுநகர்.

---

**நியூ எவரெஸ்ட் பிரியாணி ஹோட்டலுக்கு**
விஜயம் செய்யுங்கள்.


Prop: K. Karuppiah Nadar. விருதுநகர்.

---

**காளிமார்க் சோடாகலர்**

விருதுநகர்: திருநெல்வேலி: மதுரை.

---




— தமிழ்த்தென்றல்

செந்தமிழ் நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும் சிறந்த உணவு

எங்கள்

**ராஜா பார்லி பிஸ்கட்**

ஸ்தாபிதம்: ASP தயாரிப்பு 1926




தென்குமரி எல்லைமுதல் திருவேங்கடப் பதியாதாம்
செந்தமிழ் நாடெங்கினுமே சிறுவர் முதல் முதியோர் வரை
தேன் உணவு நம் ராஜாபார்லியோடு குல்கோஸ் கேக்கும்
தேவா அமுதமென உட்கொண்டு மகிழுகிறார்.

**ராஜா பிஸ்கட் கம்பெனி,**

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

கிளை:-2, காலேஜ் ஹவுஸ், டவுன் ஹால் ரோடு

திரு L. V. ஷண்முகம் பிள்ளை,

விருதுநகர் கிளை ஏஜண்ட்:

A. ராமகிருஷ்ணன், 7/321, தெப்பம் மேல் பஜார்.